பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 20 | புதன்கிழமை 06.12.2017 | கதிர் 31

## மன்னார் மீனவர்கள் நிபந்தனையின்றி நேற்று விடுதலை

மன்னார், டிசெ .06
மன்னார் தாழ்வுபாட்டுக் கடலில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 25 மன்னார் மீனவர்களும் நேற்று நிபந்தனைகள் எதுவும் இன்றி விடுதலை செய்யப்பட்டனர்.
பக்கம் 18

# முடிவேயின்றி முடிந்தது கூட்டமைப்புக் கூட்டம்

## தேர்தல் பங்கீட்டுக்கான இணக்கம் எந்த மாவட்டத்திலும் ஏற்படவில்லை

(எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 06**

**உள்ளூராட்சித் தேர்தல் பங்கீடு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் யாழ்ப்பாணக் கூட்டம் நேற்றிரவு முடிவின்றி முட்டுக்கட்டை நிலையில் முடிவுற்றது.**

**இப்பேச்சுக்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விடாப்பிடியான போக்கினால் அதிருப்தியுடன் கூட்டத்தை முடித்துக் கொண்டு தாங்கள் வெளியேறினர் என மற்றைய இரு பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட்டின் தலைவர்கள் தெரிவித்தனர்.** பக்கம் 03



## ரெலோ - ஈ.பி.ஆர்.எல்.எவ். - புளொட் - கூட்டணி

# புதிய கூட்டுக்குப் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ.06
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான தேர்தல் பங்கீட்டுக் கூட்டம் நேற்று முட்டுக்கட்டை நிலையில் முடிவுற்றமையை அடுத்து, அந்தக் கையோடே, புதிய மாற்றுக் கூட்டமைப்பு ஒன்றை அமைக்கும் முயற்சிகளைச் சிலதரப்புகள் ஆரம்பித்து விட்டன என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஏற்கனவே கூட்டமைப்பில் இருந்துதள்ளிநிற்கும் ஈ.பி.ஆர்.எல். எவ்வுடன் இப்போது அதிருப்தியுற்று நிற்கும் பக்கம் 18

## முட்டுக்கட்டை நிலைக்கு முழுப் பொறுப்பு தமிழரசு

### சாடுகிறார் ஸ்ரீகாந்தா



யாழ்ப்பாணம், டிசெ.06
“கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் தேர்தல் பங்கீட்டு விவகாரம் முட்டுக்கட்டை நிலையை எட்டியமைக்குத் தமிழரசுக் கட்சியின் விடாப்பிடியும் பக்கம் 18


## வடக்கு – கிழக்கு எம்.பிக்கள் எண்ணிக்கை மாற்றமில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 06
2017ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் வடக்கு - கிழக்கில் 5 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் நாடாளுமன்றுக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

இது தொடர்பான வர்த்தமானிஅறிவிப்பைத் தேர்தல்கள்திணைக்களம் ’ பக்கம் 18

## புதிய அரசமைப்பு மூலம் நல்லிணக்கம் நாசமாகும்

### விமலரத்ன தேரர் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 06
உருவாக்கப்படும் புதிய அரசமைப்பால் நல்லிணக்கம் சீர்குலையும் என பெல்லன்வில விமலரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
பக்கம் 18

## 2018 வடக்கு பட்ஜெட்டை முன்மொழிந்தார் முதல்வர்



யாழ்ப்பாணம், டிசெ. 06
2018ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டு நியதிச்சட்டஅறிக்கையை முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் பக்கம் 18

## காவலர்களுக்கு ‘டிமிக்கி’ விட்டு சந்தேகநபர்கள் இருவர் தப்பினர்

### 2 மணிநேரத் தேடுதலின் பின் மீண்டும் கைது வவுனியாவில் நேற்று அதிகாலை சம்பவம்

வவுனியா, டிசெ.06
வவுனியா சிறைச்சாலையிலிருந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்ட மூன்று சந்தேக நபர்களில் இருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர் பக்கம் 18

## இடர் நிலைமை; யாழிலும் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 06
காலநிலை மாற்றம் தொடர்பில் வடக்கு – கிழக்குக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முன் ஆயத்தக் கலந்துரையாடல் ஒன்று யாழ்ப் பக்கம் 18

### நீதிமன்றக் கட்டளையை மீறிய

## குற்றத்தடுப்பு அதிகாரியை கண்டித்தார் யாழ். நீதிவான்

யாழ்ப்பாணம், டிசெ. 06
கஞ்சா சான்றுப் பொருளை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிப் பகுப்பாய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப் பக்கம் 18

## தேசிய பாதுகாப்புக்கு இன்ரர்போலின் உதவி

கொழும்பு, டிசெ .06
சர்வதேசத் தீவிரவாதிகள் இலங்கையில் உள்நுழைய வாய்ப்பில்லை. தேசிய பாதுகாப்பைப்பலப்படுத்தும் விசேட பொறிமுறை நடைமுறையில் உள்ளது. இதற்கு இன்ரபோல் உதவி வருகிறது.

இவ்வாறு தெரிவித்தார் சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்நாயக்க.

சர்வதேசத்தீவிரவாதத்தை ஒழிக்கும் விசேட பக்கம் 18

# அத்துமீறும் இந்திய மீனவர்களை கைதுசெய்யும் படலம் தொடரும்!

## நாடாளுமன்றில் அமைச்சர் மஹிந்த அமரவீர

கொழும்பு, டிசெ. 06

இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறுகின்ற இந்திய மீனவர்களைக் கைது செய்யவும், அவர்களிடம் இருந்து தண்டப் பணம் பெற்றுக் கொள்வதோடு படகுகளையும் பறிமுதல் செய்யும் திட்டத்தை அமுல் படுத்தவும் எதிர்பார்ப்பதாக ஸ்ரீலங்கா மீன்பிடி அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த அறிவிப்பை



வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இருநாட்டு மீனவப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு இந்திய மத்திய அரசுடன் நட்புறவுடன் கூடிய பேச்சு நடத்தப்படுகிறது.

அத்துமீறுகின்ற இந்திய மீனவர்களையும் கைது செய்யும் நடவடிக்கையும், அவர்களது படகுகளைப் பறிமுதல் செய்கின்ற நடவடிக்கையும் தொடர்ந்து இடம்பெறும்.

அண்மையில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களும், அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளும் இது வரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லைத்தீவு நகரில் கட்டாக்காலி தொல்லை

## கண்டுகொள்ளாத அதிகாரிகள்



முல்லைத்தீவு, டிசெ. 06

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகர்ப்பகுதியில் உள்ள சுற்று வட்டத்தில் கட்டாக்காலி கால் நடைகள் ஆட்சி புரிந்து வருகின்றன.

இதனால், விபத்துக்கள் ஏற் படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. இருப்பினும் அதிகாரிகள் இதனைக் கண்டுகொள்ளவில்லை என சாரதிகளும் மக்களும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடை வளப்போர் மேச்சல் தரை இல்லாது பல்வேறு இன்னல்களுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

இருப்பினும் இரவு நேரங்க ளில் கால்நடைகளை அடைக்க வேண்டியது அவர்களின் பெரும் பொறுப்பாகும். இருப்பினும் சில பொறுப் பற்ற கால்நடை வளர்ப்போரால் வீதியில் செல்கின்ற மக்கள் சாரதிகள் விபத்துக்களையும் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக இரவு வேளை களில் முல்லைத்தீவு நகர சுற்றுவட்டம் மற்றும் நகர் பகுதிகளை கட்டாக்காலி மாடுகள் ஆட்சிபுரிவதை அவதானிக்க முடிகின்றது.

இருப்பினும் இந்த இடத்தி லிருந்து 50 மீற்றருக்குள் கரைதுறைப்பற்று பிரதேச சபை காணப்படுகிறது.

இவ்வாறு இப்பகுதிகளை இரவு வேளையில் நாளாந்தம் கால்நடைகள் நிரப்புகின்றன ஆனாலும், அதிகாரிகளும் இதனை கண்டுகொள்ள வில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தி. பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை டிசெ.06

வட்டு. கார்த்திகேய வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு, அதிபர் சூ.சசீதரன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி சூ.றொபேட் உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர்களான திருமதி சி. நாகரத்தினம், ந. சிவசுப்பிரமணியம், பழைய மாணவர் வி.தபோதரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.எம்.எஸ்.பி.குணதிலக்க, ஐ.பி.ஸி.தமிழ் செய்தி ஆசிரியர் வ.சண்முகராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

பழைய மாணவரும் சமுர்த்தி உத்தியோகத்தருமான நா. குமணன் நிறுவுநர் உரையை ஆற்றுவார். (இ)

# பொலிஸாரும் முப்படையினரும் பொறுப்புடன் செயற்பட்டனர்

## சபையில் சாகல ரத்னாயக்க

கொழும்பு, டிசெ. 06

பொலிஸாரும் முப்படையினரும்பொறுப்புடன்செயற்பட்டமையாலேயே சமீபத்திய ஹிந்தோட்டை சம்பவத்தைக் கட்டுப்படுத்த முடிந்ததென்று சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க சமீபத்தில் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைவாகக் கேட்டிருந்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

காயம் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட 134 சம்பவங்கள் தொடர்பில் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பாதிப்பு குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸ் மற்றும் விசேட



அதிரடிப்படையினர் நீக்கப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படுவதைத் தடுப்பதற்காக பொலிஸ் சோதனை பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அமைதியை ஏற்படுத்துவதற்காக மதத்தலைவர்கள் புத்தி ஜீவிகளைக்கொண்ட குழுவொன்று அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (க)

## மட்டு.கடல் பாம்பு விவகாரம்; நாரா நிறுவனம் ஆய்வு

கொழும்பு, டிசெ. 06

மட்டக்களப்பு கரையோரத்தில் பெரும் அளவு பாம்புகள் கரையொதுங்கியமைக்கான காரணம் கடல் நீரில் உள்ள வெப்பத்தன்மையே என்று நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இது குறித்து தற்போது விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தப் பாம்புகள் மட்டக்களப்பு மீனவர்களின் வலையில் சிக்கியிருந்தன. இது தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு நாரா நிறுவனத்திற்கு கடற்றொழில் அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சைக்கு தோற்றும் மாணவரை கலாசார விழாவுக்கு அழைத்தமையால் பெற்றோர் விசனம்

வவுனியா, டிசெ. 06

பாடசாலை மட்டத்தில் ஆண்டிறுதிப்பரீட்சை இடம்பெற்று வரும் நிலையில் அந்த மாணவர்களை கலாசார விழாவிற்கு அழைத்தமை தொடர்பாகப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகம் நேற்றைய தினம் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் கலாசார நிகழ் வை நடத்தியிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் பலர் பங்கேற்காத நிலையில் பாடசாலை மாணவ, மாணவிகளை அழைத்து விழாவை நடத்தியிருந்தனர்.

இது தொடர்பாக பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில்-

ஆண்டிறுதிப் பரீட்சை இடம் பெற்று வரும் நிலையில் பரீட்சைக்குத் தோற்றும் மற்றும் தோற்றவுள்ளவர்கள் உட்பட பல மாணவர்களை அழைத்து வந்து கலாசார நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

எமது பிள்ளைகள் உயர்தரத்தில் கற்கின்றனர். இவ்வாறான மாணவர்கள் நாம் பரீட்சையில் தோற்றுவதையும் அதில் பெறும் புள்ளிகள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

இந்த நிலையில் கலாசார விழாவில் மாணவர்கள் பங்கேற்க வேண்டும் என்பதை மறுக்கவில்லை. ஆனால் ஆண்டு இறுதிப் பரீட்சை நேரத்தில் இவ்வாறு அழைத்து வந்தமை தொடர்பிலேயே கவலை கொள்கின்றோம். மக்கள் வரமாட்டார்கள் என்பதால் மாணவர்களை வைத்து விழா செய்வது சரியான நடவடிக்கையா என்பதை வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சே தீர்மானிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களையே நாம் நிகழ்வுக்கு செல்ல அனுமதித்துள்ளோம். பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கலந்து கொண்டிருந்தால் நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-100)





பிந்திய செய்தி

# தமிழரசுடன் கூட்டு இல்லை; ரெலோ முடிவு

## இன்று அதிகாலை தலைமைக்குழு முடிவு; அடுத்தகட்டம் குறித்து இன்று மாலை ஆராய்வு

**வவுனியா, டிசெ.06**

**வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதில்லை என்ற தீர்க்கமான - திட்டவட்டமான - முடிவுக்கு இன்று அதிகாலை ரெலோ தலைமைக் குழு வந்தது.**

**நேற்று இரவு 10 மணி முதல் இன்று அதிகாலை 1.15 மணிவரை வவுனியாவில் நடைபெற்ற அக்கட்சியின் தலைமைக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டிருக்கின்றது.**

**“கடந்த வாரம் மூன்று நாள்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் தேர்தல் பங்கீடு தொடர்பாகத் தொடர்ந்து நடைபெற்ற பேச்சுக்களில் தமிழரசுக் கட்சி மிகக் கடுமையானதும் பிடிவாதமானதும் விட்டுக்கொடுக்க முடியாததுமான நிலைப்பாட்டை எடுத்தமையால் வேறுவழியின்றி இந்தத் தீர்மானத்துக்கு ரெலோ தலைமைக்குழு வந்துள்ளது.**

**“அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கட்சியின் தலைமைக் குழுக் கூட்டத்தில் ஆராய்ந்து தீர்மானிக்கப்படும்.” - இவ்வாறு இன்று அதிகாலை மேற்படி தலைமைக் குழுக் கூட்டத்தின் பின்னர் அக்கட்சியின் செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா ‘காலைக்கதிருக்கு’த் தகவல் வெளியிட்டார். (உ)**

### முடிவேயின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கூட்டமைப்புக் கட்சிகளின் பங்கீடு பற்றிய மூன்றாவது கூட்டம் நேற்று மாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடை பெற்றது.

ஏற்கனவே ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் ரெலோ தரப்பு அதிருப்தியுடன் வெளியேறி இருந்தது என்ற செய்திகள் பிரசுரமாகியிருந்தன.

நேற்றைய கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது. அதற்காக பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளும் வந்து காத்திருந்தனர்.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி தரப்பில் மாவை சேனாதிராசா போன்ற சில முக்கியஸ்தர்களும், ரெலோ செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா தலைமையிலான குழுவினரும் கூட்டம் நடைபெறும் –யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள – இலங்கைத்தமிழரசுக்கட்சியின் அலுவலகத்துக்கு 3.45 மணி வரை சமூகம் தரவில்லை. அவர்களுக்காக எல்லோரும் காத்திருந்தனர். 3.45 மணி அளவில் இரண்டு கட்சித் தலைவர்களும் சொற்ப நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து வந்து இறங்கினர்.

நேற்றைய கூட்டத்துக்கு முன்னர் வெளியிடம் ஒன்றில் அவர்கள் தனித்துப் பேசி சமரசம் செய்ய முயன்றனர் என்றும், அதனாலேயே நேற்றைய கூட்டத்துக்கு அவர்கள் தாமதித்து வந்து சேர்ந்தனர் என்றும் உறுதிப் படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவித்தன.

இலங்கைத் தமிழரசு சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் நாயகம் துரைராஜசிங்கம், எம்.பிக்களான சி.சிறிதரன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, சிறிநேசன், சிவமோகன் மற்றும் வடக்கு மாகாண சபைத் தவிசாளர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர் பசுபதிப் பிள்ளை, வலி வடக் குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோரும் –

ரெலோ சார்பில் அதன் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா, முன்னாள் எம்.பிக்களான ஜனா கருணாகரன், விநோநோகராதலிங்கம், கிழக்கு மாகாண சபை முன்னாள் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோரும் –

புளொட்டின் சார்பில் அதன் தலைவரான த.சித்தார்த்தன் எம்.பி., வடக்கு மாகாண அமைச்சர் சிவநேசன் (பவன்) ஆகியோரும் – பங்குபற்றினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புளொட் வலி.கிழக்கு (கோப்பாய்), வலி.தெற்கு (சுன்னாகம்), வலி. தென்மேற்கு (மானிப்பாய்), வலி மேற்கு (சுழிபுரம்) ஆகிய நான்கு சபைகளின் தலைமைத்துவம் தங்களுக்குத் தரப்பட வேண்டும் என்று கோரியது.

ஆனால் அதனைக் கடுமையாக எதிர்த்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேசசபைத்தலைமையை மட்டும் புளொட்டுக்கு வழங்கவும், மற்றொன்றை வழங்குவது குறித்துப் பரிசீலிக்கவும் தயார் எனத் தெரிவித்தது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட மூன்று பிரதேச சபைத் தலைமைகளையும் தமிழரசுக் கட்சிக்கு தருமாறு சிறிதரன் எம்.பி. வலியுறுத்தினார்.

அதற்கு ரெலோ இணக்கம் தெரிவித்தது. ஆனால் பச்சிலைப் பள்ளி (பளை) பிரதேச சபை வேண்டும் எனப் புளொட் கோரியது. அது குறித்துத் தொடர்ந்து பேச இணங்கப்பட்டது.

முல்லைத்தீவில் நான்கு பிரதேச சபைகளின் கரைதுறைப் பற்று, புதுக்குடியிருப்பு உட்பட மூன்று பிரதேச சபைகளைத் தமிழரசுக் கட்சி தனக்குத் தேவை என வலியுறுத்தியது. எஞ்சிய ஒன்றை புளொட் அல்லது ரெலோவுக்கு வழங்க இணங்கியது. ஆனால் அந்தத் திட்டத்துக்கு ரெலோ, புளொட் இரண்டுமே எதிர்ப்புத் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை 9 பிரதேச சபைகளில் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் போகக்கூடிய சபைகள் தவிர்ந்தவற்றில் மட்டக்களப்பு மாநகர சபை உட்பட நான்கு முக்கிய சபைகளின் பொறுப்புக்கு தமிழரசு உரிமை கோரியது.

ரெலோவுக்கு, புளொட்டுக்கும் மூன்றை விட்டுக் கொடுக்க அது இணங்கியது. ஆனால் அந்த இரு கட்சிகளும் அந்த யோசனையை ஏற்க மறுத்தன.

திருகோணமலையைத்தமிழரசு விருப்பப்படி பகிர்வதற்கு இணங்கலாம் என ரெலோ, புளொட் ஆகியன கோடி காட்டின.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தில் இருந்து மாறி நெடுந்தீவை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு விட்டுக் கொடுக்க இணங்கிய ரெலோ அதற்குப் பதிலாக நல்லூர் அல்லது வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையை வழங்குமாறு கோரியது. ஆனால் அதற்கு இணங்குவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி பின்னடித்தது.

மன்னார் மாவட்ட சபைகள் குறித்து பின்னர் பேச இணங்கப் பட்டது.

வவுனியா மாவட்டப் பிரதேச சபை ஒதுக்கீட்டிலும் இணக்க நிலை எட்டப்படமுடியாத தர்க்கம் நீடித்தது.

இந்த நிலையில் –

நேற்றிரவு 8 மணியளவில் ரெலோ, புளொட் உறுப்பினர்கள் இணக்கமான தீர்வு ஒன்றை எட்டாத நிலையில் பின்னர் பேசலாம் என்று கூறிவிட்டுப் புறப்பட்டனர்.

பேச்சுகளின் நிறைவில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தனிடம் அது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட போது–

“பேச்சில் ஒரு முன்னேற்றமும் எட்டப்படவில்லை. பிணக்குகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.” – எனக் கூறிச் சென்றார்.

ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் என்.சிறீகாந்தவிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது–

“பேச்சில் ஒரு முன்னேற்றமும் இல்லை. பந்து தொடர்ந்தும் தமிழரசு கட்சியின் களத்துக்குள்ளேயே காணப்படுகின்றது. மாறவேண்டியது தமிழரசு கட்சியே” – எனக் கூறினார்.

இதனைத்தொடர்ந்துதமிழரசு கட்சியின் பொது செயலாளர் எஸ்.துரைராஜசிங்கம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்–

“சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நியமிப்பது தொடர்பாகவும், உள்ளூராட்சி சபை தேர்தலை தமிழ் தேசிய கூட்டமைப்பாக ஒன்றிணைந்து எதிர்கொள்வது பற்றியும் பேசியிருக்கின்றோம்.

“அதேபோல் நாளையும் (இன்று) தொடர்ந்து பேசுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம்.” – எனப் பதிலளித்திருந்தார்.

புளொட் மற்றும் ரெலோ அமைப்புக்கள் பிணக்குகள் தொடர்ந்தும் இருக்கின்றன எனவும், பேச்சில் முன்னேற்றம் எதுவுமில்லை எனவும் கூறிய விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

“அவ்வாறு பிரச்சினைகள் எதுவுமில்லை. பேச்சு முன்னேற்றகரமாக நடக்கிறது.” – எனக் கூறி ஊடகசந்திப்பின் இடையேஎழுந்து சென்றார் அவர்.

### புதிய...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப்படும் ஜனநாயகத் தமிரசுக் கட்சி ஆகியவற்றை ஒன்றிணைக்கவும் –

அதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனின் தலைமையில் தமிழ் மக்கள் பேரவை போன்ற தரப்புகளின் ஆதரவையும் பெற்றுக் கொள்ளவும் –

சில தரப்புகள் நேற்றிரவு தொடர்பாடல்களை ஆரம்பித்து விட்டன எனத் தெரிய வந்தது.

நேற்றிரவு நடைபெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தின் முடிவைப் பொறுத்துத் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்கு அத்தரப்புகள் காத்திருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘‘பங்காளிக் கட்சிகளை விட்டுக் கொடுத்து அரவணைத்துச் செல்லும் வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னை மாற்றிக் கொள்ளாவிட்டால் வீட்டுச்சின்னத்துக்குப் பதிலாக மாற்றுச்சின்னத்தில் – பெரும்பாலும் உதயசூரியன் சின்னத்தில் – புதிய கூட்டு உருவாவது தவிர்க்க முடியாதது.” – என்றார் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்.

ஆனால், இந்த விடயத்தில் புளொட் அமைப்பு அவசரப் படாது, அது நின்று, நிதானித்து, சாதக, பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, ஏற்கனவே அது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் கவனத்தில் எடுத்தே முடிவு எடுக்கும் என்று அதன் முக்கியஸ்தர் ஒருவர் காலைக் கதிருக்குத் தெரிவித்தார். (உ)

## தமிழ் – முஸ்லிம் ஐக்கிய மாநாடு ஞாயிறன்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.06

இலங்கை தமிழரசுக் கட்சியின் “முஸ்லிம் ஆதரவாளர் வட்டம்” ஏற்பாடு செய்துள்ள தமிழ் – முஸ்லிம் ஐக்கிய மாநாடு எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

“வடக்கின் மக்களாக எழுவோம்” எனும் மகுடம் தாங்கி தமிழ் – முஸ்லிம் மக்கள் இடையேயான நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், ஈ.சரவணபவன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, சர்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சியின் செயலாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எஸ்.துரைரட்ணசிங்கம் ஆகியோரும் –

கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான வைத்தியர் ப. சத்தியலிங்கம், த. குருகுலராஜா, இமானுவல் ஆர்னால்ட், க.சயந்தன் மற்றும் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட கிளைத் தலைவர் பெ. கனகசபாபதி ஆகியோரும் பங்குபற்றுவர்.

வடக்கு மாகாண ரீதியான இந்த மாநாடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எம். இமாம், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அய்யூப் அஸ்மின் ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் இடம்பெறவுள்ளது. (இ19)

## ஆட்டம் காணும் விமலின் கட்சி; மற்றொருவரும் மைத்திரி பக்கம்

கொழும்பு, டிசெ.06

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் பிரதித் தலைவர் வீரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையவுள்ளமை தொடர்பான காரணங்களைக் கொண்ட 8 பக்கங்களிலான ஊடக அறிக்கை அவர் வெளியிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து ஏற்கனவே இரு உறுப்பினர்கள் விலகியுள்ளனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் பலம் வாய்ந்த நபராகக் கருதப்படும் வீரகுமார திஸாநாயக்கவும் தற்போது இந்த முன்னணியில் இருந்து விலகியுள்ளமை கட்சியின் ஸ்திரத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இனவாத உசுப்பேத்தல் அரசியலை ஆரம்பித்து விட்டார் மஹிந்தர்

நேற்றுமுன்தினம் பதுளையில் தனது உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது பிரசாரப் பாதை எவ்வாறு இருக்கும் என்பதை ஆரம்பத்திலேயே கோடி காட்டிவிட்டார்.

*“பிரபாகரனுக்கே அஞ்சாத நான் இந்த அரசிடமா - நல்லாட்சித் தரப்பிடமா - மண்டியிடுவேன்?”* - என்று முதல் பிரசாரக் கூட்டத்திலேயே கேள்வி எழுப்பியிருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழர் தாயகப் பிரதேசத்தை இராணுவக் கவசம் மூலம் இரும்புத் திரையிட்டு மூடி வைத்துக் கொண்டு – புற உலகுத் தொடர்பைத் துண்டித்து வெட்டி வைத்துக் கொண்டு – பெரும் மனிதக் கொடூரக் குற்றங்களையும், இனவழிப்பு நாசவேலைகளையும் முன்னெடுத்தபடியே தமிழரின் உரிமைப் போராட்டத்தை அராஜக முறையில் அடக்கி ஒடுக்கி நசுக்கியது மஹிந்த அரசு.

மஹிந்த அரசு ஏவிவிட்ட கொடூர யுத்தத்தினால் பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பல்லாயிரம் பேர் அங்கவீனமாயினர். பெருந்தொகை உடைமைகள், சொத்துக்கள் நாசமாகின. பல்லாயிரம் குடும்பங்கள் உழைப்பாளிகளை, குடும்பத் தலைவர்களை இழந்து ஏதிலிகளாகின.

மொத்தத்தில், வரலாற்றில் மிகக் கொடூரமான – மிகக் குரூரமான - இனவழிப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டே விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தது சிங்களம்.

இலங்கைத் தமிழர்களின் ஆன்மாவில் நிரந்தர ரணமாகப் பதிந்த இந்தப் பேரவலத்தை, ஆற்றுப்படுத்தி, ஆறவைத்து, நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு மூலம் அமைதித் தீர்வு ஒன்றை எட்ட வைக்கும் முயற்சிகள் சர்வதேசப் பங்களிப்புடன் இங்கு முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், பழைய ரணகாயத்தைக் கிளறி, வேதனையைத் தூண்டி, அதில் அரசியல் குளிர் காயத் தயாராகி விட்டனர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது தரப்பினரும்.

‘பிரபாகரனுக்கு அஞ்சாமல் தாம் செயற்பட்டமை’ குறித்து அவர் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டமையால், அந்தச் செயற்பாட்டை அவர் எப்படி முன்னெடுத்தார் என்பதை அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பும் மாற்றுத் தரப்புகளுக்கு வந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மின்சாரக் கதிரை ஆபத்தில் இருந்து மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது அணியினரையும் காப்பாற்றியவர்கள் தாங்களே என்று அடிக்கடி சுயபிரபலாபம் செய்கின்றனர் நல்லாட்சி அரசுத் தரப்பினர். குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை அடிக்கடி கூறிவருகின்றார்.

‘சர்வதேச விசாரணையின் பின்னர் மின்சாரக் கதிரைத் தண்டனையை மஹிந்த தரப்பினர் எதிர்கொள்ளவிருந்தனர். சர்வதேசத்தைக் சரிப்படுத்தி, அதிலிருந்து மஹிந்த தரப்பினரைக் காப்பாற்றியவர்கள் நாங்களே!’ என்பதுதான் மைத்திரி தரப்பின் வாதமாகும். அது சரி என்றே வைத்துக் கொள்வோம்.

‘மின்சாரக் கதிரைத் தண்டனையை எதிர் கொள்ளக் கூடிய கொடூரத்தை புரிந்த விவகாரத்தைத்தான்’ இப்போது பிரபாகரனுக்கே அஞ்சாத தமது வீரத்தனமாகக் காட்ட முயல்கின்றார் மஹிந்தர்.

அந்த ‘வீரச்சிறப்பை’ சிங்கள மக்களிடம் காட்டி, இதுவரை ஓரளவுக்கேனும் நாட்டில் கட்டி எழுப்பப்பட்டுவரும் நல்லிணக்கம், புரிந்துணர்வைச் சிதறடித்து, மீண்டும் இருண்ட யுகத்துக்கு – அழிவுக் காலத்துக்கு – நாட்டை இழுத்துச் செல்வதற்கு மஹிந்தர் தயாராகி விட்டார் என்பது வெளிப்படையானது; அப்பட்டமானது; தெளிவானது.

அப்படியாயின், இனிமேலும், மஹிந்த ராஜபக்ஷ தரப்பை மின்சாரக் கதிரைத் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய அந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து நல்லாட்சி அரசு தொடர்ந்தும் காப்பாற்றப் போகின்றதா? அல்லது உண்மையை அம்பலப்படுத்துவதற்கு இணங்கி, விடயத்தை வெளிப்படுத்தப் போகின்றதா?

- இதுதான் மஹிந்தரின் வீரப்பிரதாபத் தம்பட்ட உரையை அடுத்து எழுந்துள்ள கேள்வியாகும்.

நல்லிணக்கம், புரிந்துணர்வு ஆகியவற்றின் அடிப்படையில், நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய ஒரு தீர்வை எட்டுவதற்காக மேற்படி யுத்தக் குற்ற விடயங்கள், பொறுப்புக் கூறல் அம்சங்கள் போன்றவற்றில் கொஞ்சம் அமுக்கி வாசிக்கும் தமிழர் தரப்புக்கு, இனிமேலும் அந்த மென்போக்கு நிலையில் நீடிப்பது பொருத்தமற்றது என்பதை மஹிந்தரின் பதுளைப் பேச்சு நன்கு உணர்த்தியிருக்கும் என நம்புகின்றோம்.

இனவாதத்தைக் கிளப்பி, பேரினவாத மேலாதிக்கத் திமிர்த்தனத்தைத் தூண்டி, சிங்கள - பௌத்த சிந்தனைப் போக்கை உசுப்பேத்தி விட்டு, அதன் மூலம் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிவாகை சூடலாம் எனத் திட்டமிட்டுச் செயற்படுகின்றார் மஹிந்தர்.

இந்த அழிவுப் பாதை முயற்சியை முளையிலேயே கிள்ளி, அதனை முறியடிப்பதற்கு நல்லாட்சி அரசும், தமிழர் தரப்பும் என்ன செய்யப் போகின்றன?

இந்த ஆபத்து விஷ விருட்சம் தேர்தல் பிரசார காலம் என்ற உகந்த சூழலைப் பயன்படுத்தி, ஆழ வேரூன்றி, அகல ஸ்திரப்படுத்தலைச் செய்வதற்கு முன்னர், அதனை எதிர்கொண்டு முறியடிப்பதற்கான திட்டமிட்ட செயற்பாடுகள் அவசியம்.

இல்லையேல், நல்லிணக்கத் தீர்வு முயற்சி நாசமாவது உறுதி.

இந்த இனவாத உசுப்பேத்தல் அரசியலை முறியடிப்பதற்கு தகுந்த சாணக்கியம் சிங்கள மிதவாதத் தலைமைகளிடமோ, நல்லாட்சி அரசுத் தரப்பிடமோ, தமிழ்ப் பிரதிநிதிகளிடமோ இல்லை என்பதுதான் வேதனைமிக்க யதார்த்தமாகும்.

# மஹிந்த அணிக்குள் முற்றியது முரண்பாடு

## அவசர பேச்சுக்கு உத்தரவு

கொழும்பு, டிசெ.06

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரிடையே பெரும் பிளவுநிலை ஏற்பட்டுள்ளதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிளவுநிலைக்கு முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான பசில் ராஜபக்ஷவும் காரணம் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள சில பிரிவினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பதுளையில் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட ஒன்றிணைந்த எதிரணி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதான மக்கள் கூட்டம் நடைபெற்றது.

ஏனைய மாவட்டங்களில் நடைபெற்ற மாபெரும் மக்கள் கூட்டத்திற்கு ஊடகவியலாளர்கள் ஏற்பாடு, ஏனைய அமைப்புக்கள் என்பவற்றுக்குக் குழுக்கள் நியமிக்கப்பட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் இம்முறை நடைபெற்ற மக்கள் கூட்டத்திற்கு எந்தவித ஏற்பாடுகளையும் மேற்கொள்ள ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரில் பலர் முன்வரவில்லை என்று அந்தக் கட்சியிலுள்ள உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவுநிலை உக்கிரமடைந்திருக்கும் தருணத்தில் இன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட சந்திப்பை நடத்த உத்தரவிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## சுவிஸ்குமாரை விடுவித்த குற்றச்சாட்டு;

# பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சாட்சியத்தைப் பதிய அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 06

வித்தியா படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமாரைப் பொலிஸ் தடுப்பிலிருந்துவிடுவித்துஉதவியகுற்றச்சாட்டுவழக்கின்முதலாவதுசந்தேகநபரான வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்குக் கீழ் பணியாற்றிய யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர்என்.எல்.பெரேராவால் வழங்கப்படும் சாட்சியத்தைப் பதிவு செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நேற்றுக் கட்டளையிட்டார்.

லலித் ஜயசிங்கவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் கடும் ஆட்சேபனைகளுக்குச் சரியான விளக்கத்தை வழங்கிய பின்னரே நீதிவான் ஏ.எம்.எம்.றியால் இந்த உத்தரவை வழங்கினார்.

வித்தியா படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமாரைப் பொலிஸ் தடுப்பிலிருந்து விடுவித்து உதவிய குற்றச்சாட்டில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிரான வழக்கு ஊர்காவற்றுறைநீதிமன்றில்நீதிவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்கின் முதலாவது சந்தேக நபர் லலித் ஜயசிங்க தனது சட்டத்தரணிகளுடன் மன்றில் முன்னிலையானார். இரண்டாவது சந்தேக நபரான யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில்பணியாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் தொடர்ந்து தலைமறைவாக உள்ளார் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தெரிவித்தனர்.

சிறிகஜன் மீது நேற்று மீண்டும் பிடியாணை பிறப்பித்த நீதிவான், சந்தேகநபரின் முழு விவரத்தையும் மன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். அந்த விவரங்களின் அடிப்படையில் மன்றின் கட்டளைக்கமைய சிறிகஜன் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கவேண்டாம் என குடிவரவு – குடியகல்வுத்திணைக்களத்துக்கு நீதிமன்றப் பதிவாளர் அறிவிக்கவேண்டும்எனவும்நீதிவான் அறிவுறுத்தினார்.

இந்த வழக்குத் தொடர்பில் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்ட இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உள்ளிட்டோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் அடங்கிய அறிக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மன்றில் முன்வைக்கப்பட்டது.

முதலாவது சந்தேகநபரான வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்குக் கீழ் பணியாற்றிய யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.எல்.பெரேரா, இந்த வழக்கின் சந்தேக நபர்களுக்கும் எதிராகச் சாட்சியமளிக்கத் தானாக முன்வந்துள்ளார் என நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் அவர் நேற்று மன்றுக்கு வருகை தந்திருந்தார். அவரின் சாட்சியம் பதிவதற்கு வசதியாகச் சாவகச்சேரி நீதிவான் மன்றத்தின் உரைபெயர்ப்பாளர், ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும் சாட்சியமளிப்பதாக முன்வரும் சாட்சியை நீதிவான் நீதிமன்றம் அனுமதிக்க முடியாது. அவர் தானாகவே சாட்சியமளிக்க முன்வந்தார் என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது? எனச் சந்தேக நபர் லலித் ஜயசிங்கவின் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தார்.

சாட்சியமளிக்க ஒருவர் முன்வந்தால் அவரது சாட்சியத்தைப் பதிவு செய்யவேண்டியது நீதிமன்றின் பொறுப்பு. அவ்வாறாகவே இந்தச் சாட்சியாளரையும் நீதிமன்றம்அனுமதியளிக்கிறதுஎன்று நீதிவான் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில்வழக்குவிசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# உயராது மின் கட்டணம்

மின்கட்டணம் எந்த வகையிலும் அதிகரிக்கப்படமாட்டாது என்றும், வடக்கு – கிழக்கு மாகாணங்களில் புதிதாக மின்மானி வாசிப்பாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு – செலவுத்திட்டக் குழுநிலை விவாதத்தில் மின்வலு மற்றும் புதுப்பிக்கக்கூடிய வலுசக்தி பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஆகிய அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடு பற்றி விவாதிக்கப்பட்டது.

இதன்போதே பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் மின்மானி வாசிப்பாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மின்மானி வாசிப்பு இடம்பெறுகின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பாரபட்சமற்ற எண்ணங்களை வெளிப்படுத்தி நாளைய விடியலுக்காய் இன்றே ஒன்றிணைவோம்
16
2017
JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

## நாளை

07.12.2017
வியாழக்கிழமை
நட்சத்திரம் : பூசம் பி.இ 2.17 வரை
திதி : சதுர்த்தி பி.ப 1.24 வரை
சுபநேரம் : 7.47 – 9.17 வரை
இராகுகாலம்: 1.47 – 3.17 வரை

# சாதாரண தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்பு இன்று முதல் தடை



கொழும்பு, டிசெ. 06
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான கருத் தரங்குகள் மற்றும் மேலதிக தனியார் வகுப்புக் கள் இன்று நள்ளி ரவு முதல் பரீட்சை முடியும் வரை தடை செய்யப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரி வித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் எதிர்பார்ப்பு வினாக்கள் அச்சிடு வது, வினாக்கள் தொடர்பில் கலந்துரையாடுவது ஆகிய நட வடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ள.

அவ்வாறன நடவடிக்கை களில் ஈடுபடும் நபர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை இந்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதன் முறையாக ஒரே நாளில் இம்முறை உள்ளூராட்சி தேர்தல்

## 3 லட்சம் பணியாளர்கள் தேவைப்படுவர்



கொழும்பு, டிசெ. 06
ஒரே நாளில் நடத்த எதிர் பார்த்துள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலக ளுக்கு சுமார் 400 கோடி ரூபா செலவாகும் என்று மதிப் பிடப்பட்டுள்ளது எனத் தேர் தல்கள் ஆணைக்குழு தலை வர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

இலங்கையின் வரலாற் றில், உள்ளூராட்சித் தேர்தல் நாடெங்கும் ஒரே நாளில் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த தேர்தலில் 8 ஆயிரத் துக்கும் இற்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடு வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. தேர்தல் பணிக ளுக்கு 3 லட்சம் அரச பணி யாளர்கள் தேவைப்படுகின் றனர். நாடெங்கும் சுமார் 14 ஆயிரம் வாக்களிப்பு நிலை யங்கள் அமைக்கப்படவுள்ளன.

அரசியல் கட்சிகளின் தேர் தல் பயன்பாடுகளுக்கு என அரச சொத்துக்களைப் பயன் படுத்துவதற்கு டிசெம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

அரச சொத்துக்களையோ, மத வழிபாட்டு இடங்க ளையோ தேர்தல் பரப்புரை களுக்குப் பயன்படுத்துவது சட்டவி ரோதமாகும்.

தேர்தல் முடியும் வரை அரசாங்க நியமனங்கள் மற் றும் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

வேட்புமனுக்கள் நிராகரிக் கப்படுவதைத்தவிர்ப்பதற்கு, தேவையான பெண் வேட் பாளர்களை உள்ளடக்கிய தாக, வேட்புமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரு கோடியே 50 லட்சம் வாக்காளர் அட்டைகள், ஜன வரி மூன்றாவது வாரத்தில் வாக்காளர்களுக்குக் கிடைக் கச் செய்யப்பட உள்ளன என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிரம சக்தி வேலைத் திட்டம்; சென்மேரிஸ் முதலாமிடம்!





வவுனியா, டிசெ. 06
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிரம சக்தி வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா இலுப் பைக்குளம் சென்மேரிஸ் விளை யாட்டுக் இளைஞர் அணி முத லாமிடம் பெற்று ஐந்து லட்சம் ரூபாய் பணப்பரிசை வென் றுள்ளது.

தேசியரீதியில் சிரமசக்தி தேசிய இளைஞர் வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டு கிராம மட்ட அடையாளம் காணப்பட்ட பொது வேலைக்கு அந்த நிதி பயன்படுத்துமாறும் அதில் அந் தப் பகுதி மக்களின் பங்களிப் பும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வழங்கப் பட்ட நிதியில் இலுப்பைக்குளம் சென்மேரிஸ் விளையாட்டுக்கழக இளைஞர்கள், இக்கிராம பொது மக்களின் ஒத்துழைப் புடன் புனித அடைக்கல அன்னை வித்தியாலயத்திற்கு நுழை வாயில் மற்றும் மதில் என்பன வற்றை 6 லட்சத்து 49 ஆயிரம் ரூபா பெறுமதியில் நிர்மாணித் துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் வவு னியாவில் 22 கிராமங்களின் இளைஞர் கழகங்கள் பங்கு பற்றிய நிலையில் இலுப்பைக் குளம் கிராம சென் மேரிஸ் விளை யாட்டுக் கழகம் திறம்பட வேலை யைச் செய்து மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள் ளது.

இதனையடுத்து மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடம் இருந்து 5 லட்சம் ரூபா பணப்பரிசை வென்றுள்ள துடன், தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகியுள்ளது. (க-100)

# நாட்டில் 10 லட்சம் பேருக்கு அடையாள அட்டைகள் இல்லை



கொழும்பு, டிசெ. 06
நாட்டின் மொத்த சனத் தொகையில் பத்து லட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டைகள் கிடையா என தேசிய ஆட்பதிவு திணைக் களம் நடத்திய ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பத்து லட்சம் பேருக்கு தேசியஅடையாளஅட்டையோ அல்லது வேறு அத்தியாவ சிய ஆவணங்களோ கிடைய எனத் தெரிவிக்கப்படுகி றது.

இதில் ஏழு லட்சம் பேர் வயோதிபர்கள் என ஆட் பதிவு திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் வியானி குணதிலக்க கொழும்பு ஊட கங்களுக்குத் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

குருணாகல் மாவட்டத்தில் மட்டும் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத 80 ஆயிரம் பேர் உள்ளனர்.

அனைத்து மாவட்டங் களிலும் இந்த நிலைமை நீடித்து வருகின்றது, முதிய வர்கள் அத்தியாவசிய ஆவ ணங்களைப் பெற்றுக் கொள் வதில் ஆர்வம் காட்டுவ தில்லை. நடமாடும் சேவை கள் ஊடாக அவர்களிடம் சென்று தேசிய அடையாள அட்டைகளை வழங்குவ தற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் வியானி குண திலக்க தெரிவித்துள் ளார். (க)

# இந்தியப் பெண்ணொருவர் கைது!

இந்தியப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் மாலை ஊர்காவற்துறை பொலிஸால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

47 வயதான இவர் குடிவரவு- குடியகல்வு சட்டத்தை மீறும் வகையில் சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வந்து புடைவை விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழே கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இவர் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (க)

# சமையல் எண்ணெயில் கலப்படம்!

தேங்காய் எண்ணெயுடன் பாம் எண்ணெய் கலப்படம் செய்து இரகசியமாக வியாபாரம் செய்து வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் தம்புள்ளை பொலிஸ் அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின்போதே இந்த மோசடி தொடர்பான விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதன்போது 25 ஆயிரம் லீற்றர் கலப்படம் செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் பொலிஸா ரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர் வியாபாரத்துக்காகப் பயன்படுத்திய லொறி மற்றும் கெப் ரக வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கலப்படம் செய்த எண்ணெயை விற்பனை செய்தார். என்பதை ஒப்புக் கொண்டு அவர் பொலிஸாருக்கு வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

அத்துடன், வேறு சில இடங்களிலும் இவ்வாறான வியாபாரங்கள் இடம்பெற்று வருகின்றன என் றும் விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் குறிப் பிட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட மோசடியுடன் தொடர்புடைய சந்தேக நபர், சட்டவிரோதமான புதையல் தோண்டும் செயற்பாட்டிலும் ஈடுபட் டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

எண்ணெய் வியாபாரம் புரிந்து வந்த நிலையத் துக்கு பின்னால் இந்தப் புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என அங்கு புதையல் வேலையில் ஈடுபட்ட நபரொருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த மோசடி தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை விசேட பொலிஸார் அதி ரடிப் படையினர் மேற் கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# பிரதேச மற்றும் மாவட்டத்தின் வறுமையைக் குறைத்து தேசிய ரீதியிலும் பங்களிப்பு வழங்குவோராக மாறவேண்டும்

## மட்டு. மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,டிசெ.06

அரசால் செயற்படுத்தப்படுகின்ற திட்டங்களுடன் இணைந்து கொண்டு பங்களிப்பையும் வழங்கி உங்களுடைய குடும்ப வருமானத்தை அதிகரித்துக்கொள்வதுடன், பிரதேச மற்றும் மாவட்டத்தின் வறுமையைக் குறைத்து தேசிய மட்டத்திலும் பங்களிப்பு வழங்குபவர்களாக நீங்கள் மாற வேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன்.

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் பொருளாதார வலுப்படுத்தல் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் நடைபெற்ற 102 பயனாளிகளுக்கு 48 லட்சம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள்வழங்கும்நிகழ்வில் உரையாற்றும்போதே மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பட்டிப்பளையிலுள்ள மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி கௌரி தினேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களை விடவும் இந்த வருடத்தில் வறுமை சற்றுக் குறைந்திருக்கிறது. 11.3 வீதமாக தற்போதைய தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

அந்த அடிப்படையில் இது வரையில் நாங்கள் பல்வேறு நிதி மூலங்களின் மூலம் வாழ்வாதார உதவித்திட்டங்கள் மூலம் வங்கிய போதும், தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் மூலம் 9.5 கோடி ரூபாவை இவ்வாறான வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.



மேலும், தேசிய ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தின் ஊடாக 10 கோடி ரூபா பெறுமதியான நிதியின் மூலம் வாழ்வாதார உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது.

எனவே, 20 கோடி ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்கள் வாழ்வாதார வேலைத் திட்டங்கள் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே, இத்திட்டங்களின் ஊடாக இப்பிரதேசத்தின் வறுமையைத் தணித்து மக்களுடைய வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எங்களுடைய களநிலை உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தங்களது அமைச்சின் ஊடாக இவ்வருடத்தில் 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீட் டில் மேற்கொள்ளப் பட்டுள்ள வாழ்வாதார உபகரணங்கள் வழங்கல், வீதிப்புனரமைப்பு மற்றும் குளங்களின் புனரமைப்பு உள்ளிட்ட திட்டங்களையும் இதன்போது பார்வையிட்டனர்.

இந்த நிகழ்வில மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.நேசராஜா, மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ். முரளிதரன், மண்முனை தென் மேற்கு பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களான எம்.குணரெட்ணம், கே. பிரபாகரன், தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தில் கரையோரங்களில் இருந்து மீனவக் குடும்பங்கள் அகற்றப்பட்டு வருகின்றன!

## மனிதநேயமற்ற செயல் என்கிறார் வியாழேந்திரன் எம்.பி.

மட்டக்களப்பு,டிசெ.06

கிழக்கு மாகாணத்தில் கடற்கரையோரங்களில் கூடாரங்களை அமைத்து 50 வருடங்களுக்கு மேலாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவக் குடும்பங்கள் எல்லை நிர்ணயம் என்றபேரில் சட்டவிரோதமாக அகற்றப்பட்டு வருகின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற 2018 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மின் வலு புதுபிக்கத்தக்க சக்தி, பெற்றோலிய வளங்கள், கடற்றொழில் மற்றும் மீன்வள நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விவசாயத்துக்கு இணையாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய துறையாக மீன் பிடித்துறை உள்ளது. ஆனால், கடந்தகால அரசுகள் இத்துறைமீது அதிக கவனம் செலுத்தவில்லை. மேற்குலக நாடுகள் நீர்வளத்தை கொண்டு தமது பொருளாதாரத்தில் வெற்றிக்கொண்டுள்ளன.

வடஅமெரிக்க நாடுகளில் வருடத்தில் குறிப்பிட்ட நாள்கள் மாத்திரமே மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியும். நவீன முறையில் கீழ் அவர்கள் தமது தேவைக்கு மீன்வளத்தை பெற்றுக்கொள்கின்றமையுடன், ஏற்றுமதியும் செய்கின்றனர். ஆனால், நாம் வருடமுழுவதும் இந்தத் தொழிலை செய்ய கூடியதாக உள்ளது. மேற்குலக நாடுகளின் நவீன தொழில்நுட்பத்தை பெற்றுக்கொண்டு வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் தொழில் துறையாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண் டும்.

கடல்தொழில் சார்ந்த தொழில்முறைகளை அதிகரிக்கும் போது வேலைவாய்ப்புக்கும் தீர்வு கிடைக்கும். மட்டக்களப்பில் அதிகளவான குளங்கள் சேதமடைந்துள்ளன.

105இற்கும் மேற்பட்ட குளங்கள் புனரமைக்கப்படாது உள்ளன. யுத்தம் காரணமாக அதிகளவான குளங்கள் தூர்வாரப்படாதும் உள்ளன. இந்த ஒவ்வொரு குளங்களையும் நம்பி தமது வாழ்வாதாரத்தைகொண்டு சென்ற மக்கள் உள்ளனர்.

தமிழர்களின் வரலாறும் நீர்விலைகளை நம்பியே இருந்துள்ளது. யுத்தம் காரணமாக வடக்கு,கிழக்கில் அதிகளவான குளங்கள்சேதமடைந்துள்ளன. ஆட்சிமாற்றத்தில் பின்னர் பிரதேச அபிவிருத்தி மற்றும் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்கள் நடத்தி இந்த விடயம் குறித்து நடவடிக்கையெடுக்குமாறு கூறினோம். ஆனால், இவை அமைச்சு மட்டத்தில் இன்னமும் தேக்க நிலையிலேயே உள்ளன.



நன்னீர் மீன்வளர்ப்பு செயற்பாட்டை மட்டக்களப்பில் சிறப்பாகச் செய்ய முடியும். இதனைச் சீர்செய்யும் போது மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

மீன்பிடி உபகரணங்களை வழங்க அரசு முன்வர வேண் டும். யுத்தம், சுனாமியால் பாதிக்கப்பட்டது மீனவர் கள் தான். விவசாயத்திற்கு இணையாக தங்கள் ஜீவனோபாயமாக மீன்பிடித்துறையை வடக்கு, கிழக்கு மக்கள் நம்பியுள்ளனர்.

நல்லாட்சி அரசு இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். மீன்பிடி தொழிலை ஊக்குவிக்க மானியம், மீனவப் படகுகளை வழங்க அரசு முன் வருமானால் கிழக்கில் மீன் பிடித்துறை வளர்ச்சிக்காணும் என்பதுடன், நாட்டின் தேசிய வருமானமும் அதிகரிக்கும்.

கிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த கடந்த அரசும் இந்த அரசும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. நட்சத்திர விடுதிகளை அமைப்பதற்காக பல மீனவக் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன.

அவர்களுக்குக் காணிகள் மற்றும் தொழிலை மேம்படுத்த நடவடிக்கையெடுப்பதாகக் கூறியே வெளியேற்றப்பட்டனர். ஆனால், இதுவரை எவ்வித உதவிகளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அம்பாறை, திருக்கோணமலை, மட்டக்களப்பு எனப் பல பிரதேசங்களில் இருந்து எவ்வாறு மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கு உரிய உதவித் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

கடற்கரையை அண்டி தற்காலிக கூடாரங்களை அமைத்து மீனவர்கள் அதிகளவு மீன்படித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். 50 வருடத்திற்கு மேல் அவர்கள் இவ்வாறு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அவர்களை வெளியேறுமாறு தற்போது கூறப்பட்டுள்ளது. இது மனிதநேயத்திற்கு எதிரானது.

எல்லை நிர்ணயம் என்று அந்த மக்களின் நிலங்கள் பறிக்கப்படுகின்றன. இதனால் அவர்கள் பல இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். சட்டங்கள் என்பது மக்களுக்குதான். அது மக்களைப் பாதிக்காதாவாறு இருக்க வேண்டும்.

யுத்தக் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து பல மீனவர்கள் வெளியேறியிருந்தனர். அவர்களுக்கு அங்குச் சொந்த நிலம் இருந்தது. மீண்டும் அந்தத் தொழிலை அவர்கள் செய்ய வரும்போதும் அந்த நிலங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும். மொத்த மீன் உற்பத்தியில் 43 சதவீதம் வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வந்தன. இது இன்று வீழ்ச்சி கண்டுள்ளது. சம்பந்தப்பட்ட அமைச்சு இதற்கு உரிய நடவடிக்கையெடுத்தால் 43சதவீதத்திற்கு அதிகமாகவே வளர்ச்சியடையும்.

இதேவேளை, மட்டக்களப்பில் இன்னமும் எல்லைப்புறங்களில் உள்ள கிராமங்கள் மின் இணைப்பைப்பெறமுடியாதுள்ளது. இந்த விடயம் குறித்தும் துறைசார் அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது, குறிக்கிட்ட மின்வலும் மற்றும் எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா, மட்டக்களப்பில் மின் இணைப்புப்பெறாத கிராமங்களின் பட்டியலை வழங்கினால் தான் உடனடியாக நடவடிக்கையெடுக்க முடியும் என்று கூறினார்.

# நாட்டில் இன்று முதல் காற்றின் வேகம் அதிகரிக்கும்!



கொழும்பு, டிசெ. 06

தெற்கு அந்தமான் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள காற்ற முத்த தாழ்வு நிலை அதிகரித்து வருகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் ஊடாகவும் நாட்டைச் சுற்றி யுள்ள கரையோரப் பகுதிக ளிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு தென் கரையோரப் பகுதிகளிலும் இன்று முதல் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். நாட்டின் பல பகுதிகளிலும் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையுடன் கூடிய காலநிலை காணப்படும்.

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் அதி கூடிய மழை வீழ்ச்சியாக 75 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொத்துவிலி லிருந்து திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையிலான கடற் கரையோரப் பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதோடு அச்சந்தர்ப்பத்தில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக் கூடும். எனவே, மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# அம்பாந்தோட்டை சீனாவிடம்; சிறப்பு அமைச்சரவைக் கூட்டம்



கொழும்பு, டிசெ. 06

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீன நிறுவனத்திடம் கையளிப்பது தொடர்பானவர்த்தமானி அறிவிப்பை அங்கீகரிப்பதற்காக நாளை சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதுடன், நாடாளுமன்றத்திலும் அதற்கு அங்கீகாரம் அளிக்கப்படவுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியாக நிர்வகிக்கும் உடன்பாட்டுக்கு அமைய, துறைமுகம் சீன நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பை அங்கீகரிக்க, நாளை சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

அதையடுத்து, நாளை இரவு 7.30 மணிக்கு, அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்ட வர்த்தமானி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இரவு, 9.30 மணி வரைக்கும் விவாதம் நடத்தப்படும்.

மூலோபாய அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், இந்த வர்த்தமானிக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்துக்குப் பின்னரான சூழ்நிலையில்

# நாட்டை முன்னேறிச் செல்ல நல்லாட்சி அரசு பாடுபடுகிறது



பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 06

நாட்டிலுள்ள அனைவரையும் ஒன்றிணைத்து யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கு அரசு பாடுபடுகிறது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்து, பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கி அதனை போஷிக்க திடசங்கற்பம் பூண்டுள்ளது எனத் தெரிவித்த பிரதமர், நாட்டிலுள்ள அனை வரையும் ஒன்றிணைத்து யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கு அரசு பாடுபடுகிறது என்றார்.

இதன் மூலம் சகலரும் தத்தமது உரிமைகளை நிறை வேற்றிக் கொள்ளக்கூடிய வசதி உள்ளது. சமய வழிபாட்டு சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டைப் போடக் கூடாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மத்திய கலாசார நிதியத்தின் கீழ் அமுலாகும் 'சசுனோதய' என்ற வேலைத் திட்டத்தின் கீழ் 850 விஹாரைகளுக்கு நிதியுதவிகள் வழங்கும் நிகழ்வு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் பிரதமர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விஹாரைகள் உள்ளிட்ட வணக்க ஸ்தலங்களின் அபிவிருத்திக்காக கூடுதலாக பாடுபட்டது சமகால அரசே இதற்கு முன்னர் ஆட்சி பீடத்தில் இருந்த அரசு பௌத்த வணக்க ஸ்தலங்களின் அபிவிருத்திக்காக இவ்வளவு பணம் கொடுக்கவில்லை என்றும் பிரதமர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

# கடலுக்குச் சென்ற மீனவர்களைக் காணவில்லை!

கொழும்பு, டிசெ. 06

நீர்கொழும்பிலிருந்து படகில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் அடங்கிய குழு ஒன்று கடந்த 29 ஆம் திகதி ஆழ்கடலில் விபத்துக்குள்ளாகி காணாமற்போயுள்ளது எனத் தெரியவருகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக 'செனுரி துவதருசி புதா' என்ற பெயர் கொண்ட படகில் சென்ற மீனவர்கள் நான்கு பேரே இவ்வாறு காணாமற்போயுள்ளனர்.

கடந்த மாதம் 16ஆம்திகதி நீர்கொழும்பிலிருந்து படகில் இந்த நான்கு மீனவர்கள் தொழிலுக்குச் சென்றுள்ளனர். கடந்த 29 ஆம் திகதி முதல் படகுடன் இருந்த தொடர்பு நின்று போயுள்ளது எனத் துங்கல்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



கடற்கரை வீதியைச் சேர்ந்த ஸ்டெனலி ரொட்ரிகோ (படகு ஓட்டுநர்) , குடாபாடுவ பிரதேசத்தைச் சேர்ந்த நெல்சன் ரொட்ரிகோ, அஜித் குமார மற்றும் பலகத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த லக்மால் ரொட்ரிகோ ஆகியோரே இந்த படகில் தொழிலுக்காகச் சென்று காணாமற்போயுள்ளவர்களாவர்.

# பனாகொட ஸ்ரீபோதிராஜா விகாரையின் பௌர்ணமி நிகழ்வில் இராணுவத் தளபதி

கொழும்பு, டிசெ. 06

பனாகொட ஸ்ரீபோதிராஜா இராணுவ விகாரையில் அரச மரத்திற்கு அருகில் தங்கவேலி கள் அமைக்கப்பட்டு இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனாநாயகவால் திறந்து வைக்கப்பட்டது.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு திறந்துவைக்கப்பட்ட இந்த தங்க வேலிகள் அமைக்கும் பணிகள் இராணுவ பௌத்த சங்கத்தின் தலைவரான மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவின் வழிக்காட்டலின் கீழ் இராணுவ பொறியியலாளர் படையணியால் மேற்கொள்ளப்பட்டன.

பிராக்மணகமதுவ புராண விகாரையின் அதிபதி மற்றும் இலங்கை இராணுவ பௌத்த சங்கத்தின் அனுசாசக ஆதிபூஜ்ய பேராசிரியர் மாவுல் கொட சுமனரத்ன நாஹிம்பாண தேரரின் தலைமையில் விஷேட பௌத்த மத நிகழ்வுகள் இடம் பெற்றன.

இராணுவ பௌத்த சங்கத்தின் தலைவர் மற்றும் மேற்கு பாதுகாப்பு படைத்தளபதி மேஜர்ஜெனரல் சுதந்தரண சிங்கவின் அழைப்பை ஏற்று இராணுவத் தளபதி போயா பௌர்ணமி நிகழ்விலும் கலந்துகொண்டார். (க)



# பாதீட்டு பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.06

2018ஆம் ஆண்டுக்கான வலி. கிழக்கு பிரதேச சபையின் பாதீட்டு பட்டியல் பொது மக்கள் பார்வைக்காகவும், அவர்கள் பரீட்சித்து பார்ப்பதற்காகவும் தலைமை அலுவலகத்திலும் அச்சுவேலி, புத்தூர் ,நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களிலும் இன்று 6ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 15ஆம் திகதி வரை காட்சிக்கு வைக்கப்படும் என பிரதேச சபைச் செயலாளர் யு. ஜெலீபன் தெரிவித்துள்ளார்.

(இ - 19)

# சர்வதேச விமானப் போக்குவரத்து மாநாடு; 78 நாடுகளின் பங்குபற்றலுடன் கொழும்பில்!

கொழும்பு, டிசெ. 06

10 ஆவது சர்வதேச விமானப் போக்குவரத்து மாநாடு 'அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்' என்ற தொனிப் பொருளுக்கு அமைய நேற்று முன்தினம் பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்த மாநாடு எதிர்வரும் 8ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

சர்வதேச நாடுகளுக்கிடையில் சிவில் விமானப்போக்குவரத்து சேவையைப் பலப்படுத்துவதுடன், சுற்றுலாத்துறையை நாடுகளுக்கிடையில் வலுவூட்டுவதுமே இந்த மாநாட்டின் கருப் பொருளாகக் காணப்படுகின்றது.

78 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 500 பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில் இம்மாநாடு இடம்பெறுகின்றது.

சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, அரச தொழில் முயற்சி அமைச்சர் கபீர்ஹாசிம், விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஜி.எஸ்.விதானகே, இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவர் ஆனந்த விமலசேன மற்றும் சிவில் விமான சேவை நிறைவேற்று பணிப்பாளர் உட்படப் பிரதான நிறைவேற்று அதிகாரி எச்.எம்.சி. நிமல்சிறி போன்ற முக்கிய பிரமுகர்கள் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னர் இந்த மாநாடு தென்னாசிய நாடுகளுக்கிடையில் இடம் பெற்றது. கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் மும்பை நகரில் தாஜ் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி ராசி பலன் 06.12.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 21 ஆம் நாள் புதன்கிழமை திருதியைத் திதி பகல் 10.18 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம் புனர்பூசம் இரவு 9.56 வரை பின்னர் பூசம் சித்தயோகம் முழுவதும் இன்று சங்கட சதுர்த்தி

**ராகுகாலம்** - பகல் 12.01 மணி முதல் 1.28 மணி வரை

**சுபநேரம்** -மாலை 4.53 மணி முதல் 6.53 மணி வரை

**திவசம் செய்ய வேண்டிய திதி-** கார்த்திகை மாத தேய்பிறை

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** புனர் பூசம்

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். குடும்ப உறவு சுமாராக இருக்கும். தொழில் அலைச்சலும் சச்சரவும் இருந்து வரும்.

**ரிஷபம் :** நன்மையான நாள். செய்யும் தொழிலிலும் எடுத்த காரியங்களிலும் முன்னேற்றம் உண்டாகும். அரசாங்க அதிகாரிகளின் தொடர்புகளால் நன்மை உண்டாகும்.குடும்ப ஆரோக்கியம் சிறப்படையும்

**மிதுனம் :** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளர்ச்சி அடையும். உத்தியோகத்தர்களுள் செல்வாக்கு பெருகும். செய்யும் தொழிலில் சுய முயற்சியால் நன்மை அடைவார்கள்.

**கடகம் :** சஞ்சலமான நாள். தனவரவு குறையும். மனம் குழப்பமடையும். எதையும் சரிவர முடிவு எடுக்கமுடியாமல் தடுமாறுவார்கள். வியாபாரத்தொழிலி ல் நட்டமுண்டாகும்.

**சிம்மம் :** யோகமான நாள். பணவரவு குறையும். பணிபுரியும் இடத்தில் இவர்களுக்கென்று ஒரு மரியாதை இருக்கும். பதவி உயர்வு தேடி வரும். வீடு வாகன யோகம் உண்டாகும்.

**கன்னி :** மத்திமமான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு குறையும். குடும்பசுகம் , தேகசுகம் ஓரளவு சீராக இருக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வியாபாரம் ஏறு இறங்குமுகமாக நடக்கும்.

**துலாம் :** சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நேரும். திருமணமாகாதோருக்கு அந்த வாய்ப்பு உண்டாகும்.

**விருச்சிகம் :** சலனம் மிகுந்த நாள். மனதில் இனம் புரியாத கவலை உண்டாகும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்ப செலவுகள் அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகும்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். உடல் நலனில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றம் அடைவார்கள்.

**மகரம் :** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லலுறவு நிலவும். வெளிநாட்டு வரவால் மகிழ்ச்சி உண்டாகும். ஆடை, அணிமணிச்சேர்கை உண்டாகும்.

**கும்பம் :** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் நெருக்கம் , பாசம் அதிகரிக்கும். வியாபாரத்தில் முதலீடுகளால் ஆக்கபூர்வமான முன்னேற்றம் அடைவார்கள்.

**மீனம் :** கவலையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் நல்லுறவு குன்றும். உறவினர்களால் உபத்திரவம் உண்டாகும். உடலில் உபாதைகள் உண்டாகி மருத்துவ செலவுகள் அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: விசகம் 4ம் பாதம் அனுஷம் கேட்டை ஆகிய நட்சத்திரங்க ளில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

# சீரற்ற காலநிலை தொடர்பில் அதிகாரிகள் அவசர கூட்டம்!

கொழும்பு, டிசெ. 06

சீரற்ற காலநிலையால் வடக்கு கிழக்கில் ஏற்படக் கூடிய அனர்த்தத்தை எதிர் கொள்வது குறித்து வடக்கு கிழக்கில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள், உயர் அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கமைவாக இந்த கூட்டங்கள் நடைபெற்றன என வடக்கு கிழக்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி யாழ்ப்பாணம், திருகோணமலை உள்ளிட்ட மாவட்ட பிரதேச செயலாளர்கள் அரசாங்க அதிகாரிகள், உயர் அதிகாரிகளுக்கு இடையே இந்த கூட்டம் இடம்பெற்றுள்ளது.

அனர்த்தத்தை எதிர்கொள்ளக்கூடிய முன்னேற்பாடு குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்க தாழ்வு நிலையின் காரணமாக ஏற்படக் கூடிய பாதிப்புக்களை எதிர்கொள்ளக்கூடிய முன்னேற்பாடுகளுக்காக இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(க)

# புன்னைநீராவியில் கால்நடைகளால் விவசாய நிலங்களுக்குப் பெரும் பாதிப்பு!



விசுவமடு புதிய புன்னை நீராவியடி பகுதியில் கால் நடைகளால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

புன்னைநீராவியடி பகுதியில் வயல்செய்கை செய்துள்ள விவசாயிகள் இந்தக் கவலையை வெளியிட்டுள்ளனர்.

கால்நடை வளர்ப்போர் வயல் நிலங்களில் கால் நடைகளை மேய்ச்சலுக்காக சாய்த்து விடுகின்றார்கள். இதனால் நெற்பயிர்களை கால்நடைகள் மேய்கின்றன வயல் நிலங்கள் அழிவடைந்து செல்கின்றன.

கால்நடை உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தியும் அவற்றை கட்டுப்படுத்த எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனவயல்நில உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் வீடு உடைத்து நகை திருட்டு!

வவுனியா, டிசெ. 06

வவுனியா, குட்செட் வீதியில் உள்ள வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்த நகைகள் திருடிச் செல்லப்பட்டுள்ளன என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வவுனியா, குட்செட் வீதியில் உள்ள வீடு ஒன்றில் வசிப்பவர்கள் வீட்டில் இல்லாத நிலையில் அவ் வீட்டின் பின் வேலி வழியாக உள்நுழைந்த நபர்கள் வீட்டுக் கதவை உடைத்து வீட்டிற்குள் இருந்த சங்கிலி, தோடு, மோதிரம் உள்ளிட்ட ஐந்து பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இரவு வேளை வீட்டில் வசிப்பவர்கள் வீட்டிற்குச் சென்ற போதே திருட்டுப் போயிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து மோப்ப நாய்களின் உதவியுடன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(க-100)

# மூக்குக்கண்ணாடி வழங்கல்

தொல்புரம், டிசெ.06

தந்தை செல்வா நற்பணி மன்ற அனுசரணையுடன் தொல்புரம் றெமிங்ரன் கல்வி வளர்சோலை ஆதரவுடன் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் இடம் பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தரும் வைத்தியர்கள் கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளனர். இதில் பங்கு கொள்ள விரும்புவோர் இன்று புதன் கிழமை தொடக்கம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(இ)



# முகாம் வாழ்க்கைக்கு முடிவு எப்போது?

சமீப காலமாக, இந்தியாவில் உள்ள ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகள் தொடர்பானசெய்திகளில்தான் ஊடகங்களின் கவனம் இருக்கிறது. ஆனால், கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக இங்கு இருந்துவரும் இலங்கை அகதிகளின் நிலை பொதுமக்களின் கவனத்திலிருந்து காணாமல் போயிருக்கிறது.

இலங்கையில் 1983 ஜூலையில் தமிழர்களுக்கு எதிரான படுகொலைகள் தொடங்கியது முதல், தமிழகத்தில் சுமார் ஒரு லட்சம் இலங்கை அகதிகள் வசித்துவருகிறார்கள். அவர்கள் வசிக்கும் முகாம்களின் மோசமான நிலை, முகாம்களை விட்டு வெளியில் சென்று வருவதில் இருக்கும் கட்டுப்பாடுகள், குறைந்த அளவிலான வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புகள் போன்றவை அவர்களைப் பாதித்திருக்கின்றன.

மலையகத் தமிழர்கள் என்று அழைக்கப்படும் இலங்கையின் மத்திய பகுதிகளிலிருந்து வந்த அகதிகள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை, அவர்கள் நாடற்றவர்கள் எனும் நிலையில் இருப்பதுதான்.

**எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

அகதிகள் சமூகரீதியிலான பிரச்சினைகளாலும் உளவியல் சிக்கல்களாலும் பாதிக்கப்பட்டிருப்பதை, தற்கொலைகள், பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்துதல், குழந்தைத் திருமணங்கள் போன்ற சம்பவங்கள் உணர்த்துகின்றன. நடுத்தர வயது அகதிகள் பலர் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குறித்த கவலையில் இருக்கிறார்கள். முகாம்களில் இருக்கும் அகதிகளில் 40% பேர் 18 வயதுக்கும் குறைவானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 28,500 அகதிகள் நாடற்றவர்கள் என்று சொல்லப்படும் நிலையில், அவர்கள் நாடு திரும்புவதற்கு ஏதுவாக 2003 மற்றும் 2009 இல் சட்டத் திருத்தங்களைச் செய்தது இலங்கை அரசு. அகதிகள் நாடு திரும்புவதன் மூலம், தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள வடக்கு மாகாணத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலம் அதிகரிக்கும் என்பதால், இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் அதை விரும்பக்கூடும்.

எனினும், அகதிகள் சுய விருப்பத்தின் பேரில் நாடு திரும்புவது என்பது மந்தமாகத்தான் நடந்துவருகிறது. 2009 மே மாதம் ஈழப் போர் முடிவுக்கு வந்த சமயத்திலும், நாடு திரும்ப விருப்பம் உள்ளவர்களுக்கு விசா கட்டணத்திலும், அனுமதிக்கப்பட்ட காலத்தைவிடவும் அதிக நாள்கள் தங்கியிருந்தால் விதிக்கப்படும் அபராதத்திலும் சலுகை அளிப்பதாக மத்திய அரசு அறிவித்தபோதும்கூட இலங்கைக்குத் திரும்புவதில் பலர் முன் வரவில்லை.

அகதிகளுக்கான ஐ.நா.ஆணையத்தின் அலுவலகத்துடன் இணைந்து, இந்திய அதிகாரிகள் கொண்டுவந்த திட்டத்தின் மூலம், கடந்த எட்டு ஆண்டுகளில், அகதிகளில் சுமார் 10% (9,238 பேர்)தான் இலங்கைக்குத் திரும்பியிருக்கிறார்கள். அகதிகள் நாடு திரும்ப மறுப்பதற்குச் சில முக்கியக் காரணங்கள் உண்டு.

தமிழ்நாட்டில் உள்ள 107 முகாம்களில் வசிக்கும் சுமார் 62,000 அகதிகள் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பல்வேறு நிவாரண உதவிகளைப் பெறுகிறார்கள். கடந்த சில ஆண்டுகளில், அகதி முகாம்களைச் சேர்ந்த பல மாணவ, மாணவிகள் தொழில் சார் பட்டப் படிப்புகளில், குறிப்பாகப் பொறியியல் படிப்புகளில் சேரும் வகையில் தமிழக அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. தமிழகத்தில் முகாம்கள் அல்லாத வெளியிடங்களில் தங்கியிருக்கும் அகதிகள் சமூகத்தைச் சேர்ந்த 36,800 மாணவர்களும் இதில் பலனடைந்திருக்கிறார்கள்.

**முக்கிய கவலை**

வீடுகளின் தரம், பணிகளின் தன்மை ஆகியவற்றை எல்லாம் தாண்டி, இலங்கை அகதிகள் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள். அத்துடன், முழுக்க தமிழ்நாட்டிலேயே வளர்ந்த ஒரு புதிய தலைமுறை உண்டு. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு நகரங்களின் நினைவுடன் வாழும் தங்கள் பெற்றோர் போல் அல்லாமல், இலங்கை என்பது அவர்களுக்குக் கிட்டத்தட்ட வேற்று நாடுதான் என்று சொன்னால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

இலங்கையில் வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்பதுதான் அகதிகளின் முக்கியக் கவலை. அகதிகளுக்கான ஐ.நா. ஆணையம் 2015 இல் இலங்கை திரும்பிய அகதிகளிடம் நடத்திய ஆய்வில், அங்கு வாழ்வாதார வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கின்றன என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இலங்கையின் பொருளாதார நிலையை வைத்துப் பார்க்கும்போது, இந்த நிலைமையில் தற்போதைக்கு முன்னேற்றம் இருக்காது என்றே தெரிகிறது.

மலையகப் பகுதிகளிலிருந்து வந்த அகதிகள் நிலம் அற்றவர்கள். குறிப்பிட்ட அளவு நிலமாவது வழங்கப்படாவிட்டால், அவர்கள் நாடு திரும்ப விரும்ப மாட்டார்கள். தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிய மலையகப் பகுதித் தமிழர்கள் தற்போது ஆர்வம் காட்டுவதில்லை எனும் நிலையில், அப்பகுதிகளின் நிலவரத்தையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**என்ன செய்ய வேண்டும்?**

தற்போதைய சூழலில், அகதிகள் நாடு திரும்பும் விஷயத்துக்கு இந்தியாவும் இலங்கையும் முன்னுரிமை வழங்குவதுபோல் தெரியவில்லை. ஆனால், இதேநிலைமை தொடர்ந்தால் இரு நாடுகளாலும் சமாளிக்க முடியாது. குறிப்பாக, இந்தியாவில் அதிக அளவில் அகதிகள் இருப்பது தமிழகத்தில்தான். இப்பிரச்சினையில் விரைவில் தீர்வை எட்டுவது என்பது இரு நாடுகளும் முனைப்புக்காட்டுவதில்தான் இருக்கிறது. இதன் மூலம், இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு நீண்டகாலப் பிரச்சினை முடிவுக்குவரும் என்றால், இலங்கையைப் பொறுத்தவரை, இன நல்லிணக்கத்தை நோக்கிய முயற்சிக்கு இது வழிவகுக்கும்.



உண்மையில், தமிழகத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றங்கள், இலங்கையுடனான பேச்சுவார்த்தையைப் புதுப்பிக்க மத்திய அரசுக்கு ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கின்றன. இலங்கை அகதிகள் சமூகம், தமிழக அரசு, இலங்கையின் வடக்கு மாகாண கவுன்ஸில் ஆகியவற்றின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இலங்கை அகதிகள் தாங்களாகவே நாடு திரும்புவதற்கு இந்தியாவும் இலங்கையும் விரிவானதிட்டங்களைக் கொண்டுவரலாம்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அகதிகளுக்குக் குடியுரிமை வழங்கியது போல், இந்தியாவிலேயே தங்க விரும்பும் இலங்கை அகதிகளுக்குக் குடியுரிமை வழங்குவதுபற்றி மத்திய அரசு பரிசீலிக்கலாம். பிரச்சினைக்கு உரியவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதை மறுக்கும் உரிமையும் அரசுக்கு உண்டு. எல்லாமே சரியாக நடந்தால், தமிழகத்தில் இருக்கும் அகதிகள் முகாம்களை மூடிவிட முடியும். இலங்கையின் உள்நாட்டுப் போரைவிட நீண்ட காலமாக நடந்துவரும் ஓர் அத்தியாயத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் முடியும்!



'தி இந்து' ஆங்கிலம்
தமிழில் சுருக்கமாக:
வெ.சந்திரமோகன்

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**ரஷ்ய தொழிற்றுறை அதன் அனைத்து முயற்சிகளையும் போர் உற்பத்தியை நோக்கித் திருப்பத் தயாராக இருக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ரஷ்ய தொழிற் துறைக்கு உத்தரவிட்டுள்ளார் என பிரிட்டிஷ் பத்திரிகைகளில் அண்மையில் செய்திகள் வெளி யாகின. 2014 இல் ஜேர்மனி அதன் வெளியுறவுக் கொள்கை யில் உத்தியோக மீள் இராணுவ மயமாக்கலைக் கொண்டு வந்த நிலையில், ஸ்வீடன் கட்டாய இராணுவச் சேவையை மறு அறிமுகம் செய்துள்ள நிலை யில், இது, 1914 இல் உலகப் போர் வெடித்து வெறும் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், ஐரோப்பா மற்றும் உலகெங் கிலுமான நாடுகள் மீண்டும் முழு மையான போருக்குத் தயாரிப்பு செய்து வருகின்றன என்பதைத் தெளிவாக்குகிறது.**



செய்திகளின்படி, சோச்சி மாநாட் டில் துருக்கிய மற்றும் ஈரானிய அதி காரிகளுடன் சிரியப் போர் குறித்து விவாதித்த புடின் அங்கேதான் இந் தக் கருத்துக்களை வெளியிட்டிருந் தார். அவர் பேசுகையில், செப்ரெம்பர் மாதம் ரஷ்ய தரைப்படை சிப்பாய் களுடனான ரஷ்ய இராணுவத்தின் வருடாந்தர ஜபாட் இராணுவ பயிற்சி கள் (Zapad military exercise) மீது ஒரு மதிப்புரையை வழங்கினார்.



புட்டின் கூறினார், ‘‘இராணுவ உற் பத்தி மற்றும் சேவைகளை, நிர்ணயிக் கப்பட்ட காலத்திற்குள் அதிகரிப்பதற் கான நமது பொருளாதாரத் தகைமை, இராணுவ பாதுகாப்புக்கான மிக முக் கிய அம்சங்களில் ஒன்றாகும். இதை எட்டுவதற்கு, மூலோபாய நிறுவனங் களும் சரி சாதாரண மிகப் பெரிய நிறுவனங்களும் சரி, அனைத்தும், அவை யாருக்குச் சொந்தமாக இருந் தாலும், தயாராக இருக்க வேண்டும்.’’



பெரியளவிலான அணுஆயுத போருக்கு ரஷ்யாவால் அதன் பொரு ளாதார ஆதாரவளங்களை முழுமை யாக ஒன்று திரட்ட முடியுமா என்பதை பரிசோதிக்கவே இந்தாண்டின் ஜபாட் பயிற்சி வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதை அவர் கருத்துக்கள் தெளிவு படுத்தின. ஒத்திகைக்காக வடிவமைக் கப்பட்ட ரஷ்யாவுக்கு எதிரான வெளி நாட்டு தரைவழி படையெடுப்புகள் மற்றும் பெரியளவிலான ஏவுகணை தாக்குதலுக்கு இடையே, மூலோ பாய அணுஆயுதப் படைகளால் அவர் களின் ஏவுகணைகளை - ரஷ்யாவைத் தாக்கும் ஒரு நாட்டை நிர்மூலமாக்க வடிவமைக்கப்பட்ட அந்த நாட்டின் மிகப்பெரிய ஹைட்ரஜன் குண்டு களை - செலுத்த பயிற்சியளிப்பதே இந்தப் பயிற்சிக்கு அமைக்கப்பட்டு இருந்த ஒத்திகை காட்சியாக இருந் தது.



இதுபோன்றவொரு போரில், பொருளாதாரத்தை இராணுவம் கட் டுப்பாட்டில் எடுத்து, பொதுமக்களின் தேவைகளுக்கான உற்பத்தியை குறைத்து, பெரியளவிலான விமானப் படை மற்றும் ஏவுகணை வேட்டை யாடல்களில் உயிர்பிழைத்திருக்க தகைமை உள்ள எந்தவொரு தொழில் துறையையும் போர் முன்முயற்சி களை நோக்கி திருப்பிவிடும்.

புட்டின் தெரிவித்தார், ‘‘முதலில் அணிதிரள்வதற்கான எங்களின் தயார் நிலையையும் மற்றும் உள்நாட்டு ஆதாரவளங்களைப் பயன்படுத்தி துருப்புகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தகைமையையும் பரி சோதித்தோம். காத்திருப்போர் பட்டிய லில் வைக்கப்பட்டிருந்தவர்கள் இந்தப் பயிற்சிக்கு அழைக்கப்பட்டனர். இரா ணுவப் படைகளுக்குத் தங்களின் வாக னங்கள் மற்றும் சாதனங்களை வழங்கு வதிலும், போக்குவரத்து தொடர்பு களுக்குத் தொழில்நுட்பப் பாதுகாப்பை வழங்குவதிலும் படைத்துறைசாரா நிறுவனங்களின் தகைமையையும் பரிசோதித்தோம். போக்குவரத்து வகைமுறைகள் மற்றும் சரக்கு கையா ளும் சேவைகளையும், அத்துடன் இராணுவத்திற்கான உணவு மற்றும் மருந்துகள் குறித்தும் நாங்கள் மதிப் பீடு செய்தோம். பாதுகாப்பு நிறுவனங் களது விரைவாக உற்பத்தியை அதி கரிப்பதற்கான தகைமையை மீண்டு மொருமுறை மீளாய்வு செய்ய வேண்டி உள்ளது.’’

புட்டினின் கருத்துக்கள் சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு ஓர் அவசர எச்சரிக்கையாகும். உலகளாவிய முத லாளித்துவம் ஒரு வரலாற்று அரசியல் பொறிவை நோக்கிச் சென்று கொண்டி ருக்கிறது. தேசிய - அரசு அமைப்பு முறைக்கும் பொருளாதார உற்பத்தி யின் உலகளாவிய தன்மைக்கும் இடையிலான முரண்பாட்டில் வேரூன் றிய, மூன்றாம் உலக போர் அபா யம், உடனே நிகழக்கூடிய அளவுக்கு அதிகரித்து வருகிறது. சோச்சி மாநாட் டில் புட்டின் என்ன பகிரங்கமாக அறி வித்தாரோ, அதைத்தான் நேட்டோ அரசுகள் மக்களின் முதுகுக்குப் பின் னால் செய்து கொண்டிருக்கின்றன: பிரதான அணுஆயுத சக்திகளுக்கு இடையே நேரடியாக முற்றுமுதலான உலகளாவிய போருக்கு, அவசியமா னால், அவர்களின் சொந்த மக்களுக்கு எதிராகவும், தயாரிப்பு செய்து கொண் டிருக்கின்றன.

(கேள்வி தொடரும்...)



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 27

## இந்தியாவுக்குப் படிக்கச் சென்றோம்

**கம்பர் எந்த வட்டாரம்?**

குமாரதாசன் வீட்டில் ஏற்பட்ட பிரச்சினை பெரிதாகி, கழகம் அவன் வீட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. வித்துவான் ஆறுமுகத்திடம் கழக அலுவலகத்திற்கென, வாடகைக்கு ஓர் அறையாவது தேடித் தரும்படி கேட்டுக்கொண்டோம். எங்களுக்காக அவரும் பல இடங்களிலும் இடம் தேடினார்.

யாழ். பெருமாள் கோயிலடியில் அவரது உறவினர் வீட்டில், ஓர் அறை இருப்பதாய் அறிந்து, எங்களை அங்கு கூட்டிச் சென்றார். அந்த வீட்டுப் பெண்மணி வித்துவானின் உறவினர்.அவர் வித்துவான் மேல் பெரும் மதிப்புக் கொண்டவர். வித்துவானைக் கண்டதும் ‘‘மாமா வாருங்கோ’’ என வரவேற்றார்.

அப்பெண்மணிக்கு, எங்களைப் பெருமையாய் அறிமுகம் செய்ய நினைந்த வித்துவான், ‘‘தங்கச்சி இவங்களைத் தெரியுதா? இவங்கள் தான் கம்பற்ற ஆக்கள்’’ என்று அறிமுகம் செய்தார். அந்தப் பெண்மணி திருதிரு வெனக் கொஞ்ச நேரம் விழித்தார். மிகச் சாதாரண நடுத்தரக் குடும்பத்துப் பெண்மணி அவர். அவருக்குக் கம்பனைத் தெரிந்திருக்கவில்லை. அவர்களின் ஊரான புங்குடுதீவு, வட்டாரங்களாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது.

வித்துவான், எங்களைக் ‘‘கம்பற்ற ஆக்கள்’’ என்றதும், புங்குடுதீவைச் சேர்ந்த யாரோ ஒருவரைத்தான், வித்துவான் சொல்வதாய் நினைந்து, அந்தப் பெண்மணி வஞ்சகமில்லாமல், “கம்பரா? அவர் எந்த வட்டாரம் மாமா?” என்றார். இந்த இடமே வேண்டாம் என்று தப்பித்து வந்தோம்.

★ ★ ★

**கழகத்தின் இரண்டாவது அலுவலகம்**

பின்னர் கந்தர்மடத்தில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்து, எமது இரண்டாவது அலுவலகத்தை அதில் ஆரம்பித்தோம். யாழ். அரசடி வீதியில் அந்த அலுவலகம் இயங்கியது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள ‘ரயில்’ கடவைக்கு அருகில் அந்த வீடு இருந்தது. வீட்டுக்காரர் வீட்டின் ஓரமாக இருந்த பகுதியை, எமக்கு வாடகைக்குத் தந்தார்.

குமாரதாசனும் வீட்டோடு கோபித்



**கழகத்தின் இரண்டாவது அலுவலகம்**

கழக இரண்டாவது அலுவலகத்தில் வீட்டுக்காரருடன் குமாரதாசன், உருத்திரகுமார், குமரன், நான்


துக் கொண்டுவந்து என்னுடன் தங்கினான். நல்ல பெற்றோரின் மனதை நோகச்செய்து, நான் பாவம் தேடிய காலம் அது. சில வருடங்களாக இங்குதான் கம்பன் கழகம் இயங்கியது. ஒரு சிறிய அறை. அதனுடன் சேர்ந்து ஒருசிறு சமையலறையும் இருந்தது. நண்பர்கள் எல்லாம் இந்த அறைக்கு வருவார்கள். சமையல், சாப்பாடு என்று அறை எப்போதும் கலகலக்கும். என் குருநாதர் இந்த அறையிலும் தங்கியிருக்கிறார். எந்த வசதியும் இல்லாத அந்த இடம், கழகத்தின் அலுவலகம் ஆனதும், பல இலக்கியவாதிகள் வந்து போகும் இடமாயிற்று.

★ ★ ★

**எஸ்.ரி.சிவநாயகம்**

எங்கள் கழகத்தின் வளர்ச்சிக்கு அத்திபாரம் இட்டவர்களில், எஸ்.ரி.சிவநாயகம் அவர்களும் ஒருவர். மதுரை மாநாட்டில் நான் பேசிய பேச்சைக் கேட்டு என்மேல் அன்பு கொண்டவர். மாநாட்டில் என் உரை பற்றி நிகழ்ந்த குளறுபடிகள் பற்றியும், நாம் நாடு திரும்பியதும் நடந்த உண்மையைப் பத்திரிகைகளுக்கு எழுதியது பற்றியும் முன்னமே சொல்லியிருக்கிறேன்.

எல்லாப் பத்திரிகைகளும் எங்கள் விளக்கத்தை வெளியிட்டிருந்தன. அப்போது, சிந்தாமணிப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த, எஸ்.ரி.சிவநாயகம் மட்டும், செய்தியை வெளியிடாமல் எனக்குப் பதில் கடிதம் எழுதியிருந்தார். அப்போதுதான் முதன் முதலாக எஸ்.ரி.சிவநாயகத்தோடு தொடர்பு ஏற்பட்டது. பல வாரம் தொடர்ந்த அக்கட்டுரைத் தொடரில், எங்களை மிகவும் பாராட்டி அவர் எழுதியிருந்தார். பிறகு, அடிக்கடி எங்களோடு தொடர்பு கொண்டார்.



எஸ்.ரி. சிவநாயகம்

கொழும்பில், ஒரு கம்பன் விழா நடத்தவேண்டுமென எங்களைத் தூண்டினார். அவர் விருப்பப்படி, பிறகு கொழும்பில் ஒரு கம்பன் விழாவினை நாம் நடத்தினோம். அந்த விழாப் பற்றியும் அவரது உதவிகள் பற்றியும் பின்னர் எழுதுகிறேன்.

## குருநாதரின் இரண்டாவது இலங்கைப் பயணம்

குருநாதரின் இரண்டாவது இலங்கைப் பயணம் 1982 மார்ச்சில் நடந்தது. இவ்விழாவிற்கு குருநாதரோடு இராமேஸ்வரக் கம்பன் கழகச் செயலர், கோடூர் ராஜகோபால் சாஸ்திரிகளும் வருகை தந்தார். சிவராமலிங்கம் மாஸ்ரரின் மூத்த மகன் ராஜாஜி, வெளிநாட்டால் வந்து புதுக் கார் வாங்கியிருந்த நேரம் அது. அந்தக் காரில் சென்று ஐயாவை அழைத்து வந்தோம்.கிரியும், ராஜாஜியும் கார் ஓட்டினார்கள். அழைத்து வரும்போது பாதை தெரிந்தவன் போல் ஓடிய கிரி, அனுராதபுரம் வரை பாதை மாறி எம்மைக் கொண்டு சென்றான்.

இப் பயணத்தின்போது கொழும்பில் ஒரு விழாவையும், யாழ்ப்பாணத்தில் ஒரு விழாவையும் நடத்தினோம். கொழும்பில் முதல்நாள் விழா சரஸ்வதி மண்டபத்திலும், மற்றைய இரண்டு நாள் விழாக்களும், விவேகானந்த சபை மண்டபத்திலும் நடைபெற்றன. யாழ். விழா வழமை போல் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

★ ★ ★

**ஆறாவது கம்பன் விழா (கொழும்பில் நடந்தது) (19.03.1982)**

இவ்விழா 1982 மார்ச் 19,20,21 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இவ்விழாவுக்கான முழு ஒழுங்கையும், எஸ்.ரி.சிவநாயகம் அவர்களே செய்தார். புங்குடுதீவைச் சேர்ந்த வர்த்தகர் மயில்வாகனம் என்பவரைக் கொண்டு, விழாச் செலவுக்காக ரூபா ஐயாயிரம் வாங்கித் தந்தார். அந்தக் காலத்தில் அது பெரிய தொகை. அந்தப் பணத்தில் அந்த நாளளில் முழு விழாவினையும் ஓரளவு நடத்த முடிந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர், செல்லையா இராஜதுரை அவர்கள், கூட்டணிக் கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கட்சியிலிருந்து விலகி ஜே.ஆர்.அரசில் அமைச்சராய் இணைந்திருந்த நேரம் அது. இனத்துரோகிப் பட்டம் அந்த நேரத்தில் அவருக்குச் சூட்டப்பட்டிருந்தது.

அவர் எஸ்.ரி. சிவநாயகத்தின் நெருங்கிய நண்பர். பெரும் தமிழ் ஆர்வலர்; நல்ல பேச்சாளர். கிழக்கு மாகாணத்தில் தனித்து நின்று தமிழரசுக் கட்சியை வளர்த்தவர். அவரை விழாவில் கலந்துகொள்ள வைக்கும் கோரிக்கையை எஸ்.ரி.சிவநாயகம் எங்கள் முன் வைத்தார். அரசியல் குழப்பங்கள் ஆரம்பித்திருந்த காலமது. அக்காலத்தில் கழக நிகழ்ச்சிகளுக்குள், அரசியலைப் புகுத்துவதில்லை என்ற முடிவோடிருந்ததால், நாம் பெரிய சங்கடப்பட்டோம்.

எஸ்.ரி. சிவநாயகத்தையும் முகம் முறிக்க முடியவில்லை. நீண்ட சிந்தனையின் பின்னர், ‘‘அரசியல் பேசக் கூடாது’’ என நிபந்தனை விதித்து, அமைச்சரை விழாவுக்கு அழைக்கச் சம்மதித்தோம். அமைச்சர் விழாவன்று குறித்த நேரத்துக்குப் பிந்தி வந்ததால், அவரை விட்டு விட்டு விழாவினைத் தொடங்கினோம். எங்கள் முடிவை எஸ்.ரி.சிவநாயகமும் அங்கீகரித்தார்.

விழாவிற்கு நேரம் கடந்து வந்த அமைச்சர் இராஜதுரை, அவரை விட்டு நாம் விழாவைத் தொடங்கியதைப் பெரிது படுத்தாமல், விழாவிற்கு கலந்து, தனியே இலக்கியம் மட்டும் பேசியதோடு, விழா முடியும் வரை சபையில் இருந்து எம்மை மகிழ்வித்தார்.

(தொடரும்...)





இலங்கைக்கான பிரித்தானிய உதவித்தூதுவர் டொம்பேன் யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியிக்கு வருகை தந்து யாழில் மீள் குடியேறியுள்ள முஸ்லிம்களின் பிரச்சினையைக் கேட்டறிந்து கொண்டார்.
மாகாண சபை உறுப்பினர் ஐ. அஸ்மின் மற்றும் சமூக ஆர்வலர்களும் அவ்வேளை சமூகமளித்திருந்தனர் (இ-19)





கொழும்பு மீடியா போரத்தின் அனுசரணையில் யாழ். “இதம்” சமூக அபிவிருத்தி நிறுவனம் விசேட தேவையுடையோருடனான சந்திப்பில் கொக்குவில், பருத்தித்துறை, கற்கோவளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் விசேட தேவையுடையோருடன் அவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டது. அந்த நிகழ்வின் பதிவுகள்... (இ-19)









வடமாகணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் நிதி ஒதுக்கீட்டில் யாழ். ஒஸ்மானியா, வைத்தீஸ்வரா மத்திய கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு பாடசாலைப் பைகள் மற்றும் சைக்கிள்கள் யாழ். மன்ப உல் மதுரசா மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.(இ-19)







வவுனியா, குருமன்காடு ஆர்.டி.எவ் (R.D.F) நிறுவனத்தில் தகவல் அறியும் சட்டம், காணமற்போனோர், நிலைமாறு கால நீதி சம்பந்தமான பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், புத்தளம் ஆகிய பகுதிகளில் வருகை தந்தவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றபோது... (இ-19)





# இந்த வருடத்தில் நேற்றுவரை 344 இந்திய மீனவர்கள் கைது!



கொழும்பு, டிசெ. 06

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்த வருடம் 344 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என இந்தியா தமிழ்நாட்டை சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ச்சியாக கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த தை மாதத்தில் இருந்து நேற்று வரை 344 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக 64 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், அவர்களிடம் இருந்து 64 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.இதில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 224 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால், தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்து மீறல் அதிகரித்துக் காணப்படுவதால் கைது நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

தற்போது 120 மீனவர்கள் யாழ் சிறைச்சாலையில் அடைக்கப்பட் டுள்ளனர். சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அறிவித்தல் கிடைக் கும் வரை இவர்கள் தற்போது விடுதலை செய்யப்படுகின்றமை என்பது சாத்தியம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# ஆசிரிய ஊதிய அதிகரிப்பு குறித்து வடமாகாண சபை அமர்வில் பிரேரணை!



யாழ்ப்பாணம், டிசெ. 06

ஆசிரியர்களின் ஊதிய அதிகரிப்புக் குறித்து வடமாகாண சபை அமர்வில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாண சபையின் 111 ஆவது அமர்வு பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது.

நேற்றையதினம், வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியைகளின் மாத ஊதியத்தை அதிகரிக்குமாறு வலியுறுத்தியே இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.



மாணவர்களின் எதிர்காலத்திற்கு அத்திபாரமாக விளங்கும் முன்பள்ளிகளில் பணியாற்றும் வடமாகாண ஆசிரியர்களுக்கு மிக நீண்டகாலமாக் குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு வருவதைச்சுட்டிக்காட்டியே இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வட மாகாண சபையால் வழங்கப்படும் 4 ஆயிரம் ரூபா, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப் போதுமானதல்ல.

எனவே, அவர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும் என வடமாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் நேற்று சபையில் வலியுறுத்தியுள்ளார்.

# நாடு முழுவதும் விசேட சுற்றிவளைப்புகள்: விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நுகர்வோருக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் குறைக்கும் வகையிலேயே இந்த விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதான வர்த்தக நிலையங்களில் உள்ள களஞ்சியசாலைகள் இதன்போது சோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளன. அத்துடன், தவறான தகவல் விளக்கம் கொண்ட பொருள்கள் விற் பனை செய்யப்படுகின்றமையை தடை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

காலாவதியான பொருள்களை விற்பனை செய்தல் மற்றும் நுகர்வோரைத் தவறாக வழிநடத்தல் தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை விசாரணை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# கத்தோலிக்க அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் 15 பேரின் உடலங்கள் மன்னாரில் தோண்டியெடுப்பு!

மன்னார், டிசெ. 06

மன்னார் பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்த கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் உள்ளடங்கலாக 15 பேரின் உடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அவை தோண்டியெடுக்கப்பட்டன.

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள பொது மயானத்தில், இறந்த மக்களினதும், கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்தன.

இந்த நிலையில், கடந்த சில வருடங்களுக்கு முன் மன்னார் பொது மயானத்திற்கு அருகில் கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் அடக்கத்திற்காக தனியான மயானம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த மயானத்தில் கடந்த சில வருடங்களாக உயிரிழந்த கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்தனர்.

எனவே, மன்னார் பொது மயானத்தில் கடந்த பல வருடங்களுக்கு முன் அடக்கம் செய்யப்பட்ட கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் உள்ளடங்கலாக 15 உடலங்கள் தோண்டி எடுத்து, புதிதாக அமைக்கப்பட்டுள்ள கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் அடக்கம் செய்யும் மயானத்தில் அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை மன்னார் ஆயர் இல்லம் மேற்கொண்டது.

புதிய இடத்தில் நல்லடக்கம்



இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மன்னார் ஆயர் இல்லம் சட்டத்தரணி வில்பட் அர்யூன் ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மன்னார் நீதிவான், பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் உள்ளடங்கலாக 15 உடலங்களைத் தோண்டி எடுத்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள மயானத்தில் நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்கினார்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இந்த 15 உடலங்களும் தோண்டி எடுக்கப்பட்டன.

இதன் போது பொலிஸார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், நீதிமன்ற பணியாளர்கள், மன்னார் நகர சபை செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(கு)



காலைக்கதிர்
Kalaikkathir



# ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் மொத்தம்145 வேட்பு மனுக்கள்!

## செய்வதறியாது அதிகாரிகள் தடுமாற்றம்

சென்னை,டிசெ.06

தமிழக இடைத்தேர்தல்களிலேயே புதிய சாதனை படைக்கும் விதமாக ஆர்.கே நகரில் 145 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளமையால் சின்னம் ஒதுக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஜெயலலிதா மரணம் அடைந்ததால் காலியான ஆர்.கே.நகர் தொகுதிக்கு வருகிற 21 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 27 ஆம் திகதி தொடங்கி நேற்றுமுன்தினத்துடன் முடிந்தது.

அ.தி.மு.க. வேட்பாளர் மதுசூதனன், தி.மு.க. வேட்பாளர் மருதுகணேஷ், டி.டி.வி.தினகரன் ஆகியோர் கடந்த முதலாம் திகதி வேட்புமனு தாக்கல் செய்தனர். அன்று மாலை வரை 30 பேர் மட்டுமே மனுத் தாக்கல் செய்திருந் தனர். இந்த நிலையில் கடைசி நாளான நேற்றுமுன்தினம் மேலும் சிலர் வேட்பு மனு தாக்கல் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நேற்று முந்தினம் மதியம் திடீரென புற்றீசல் போல சுயேச்சை வேட்பாளர்கள் படையெடுத்து வந்த னர். தண்டையார்பேட்டையில் உள்ள தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அவர் கள் அனைவரும் ஒரே நேரத்தில் வந்தமையால் சலசலப்பும் தள்ளுமுள் ளும் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் அவர்களை உட்கார வைக்க முடியாத அளவுக்கு இட நெருக் கடி ஏற்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட சுயேச்சை வேட்பாளர்கள் திரண்டமை யால் தேர்தல் அதிகாரிகளும், பொலி ஸாரும் திணறினார்கள். அதைத் தொடர்ந்து மனுதாக்கல் செய்ய வந்த வர்களின் பெயர்களைக் குறித்துக் கொண்டு டோக்கன் போன்று வரிசை எண்களைக் கொடுத்தனர்.

அந்தச் சமயத்தில் நடிகர் விஷால், ஜெ.தீபா மனு தாக்கல் செய்ய வந்தனர். அவர்களும் சுயேச்சை வேட்பாளர்கள் தான் என்பதால் அவர்கள் முன்னதாக மனுதாக்கல் செய்யும் வகையில் சலுகை கள் வழங்கக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நடிகர் விஷாலுக்கு 68ஆவது எண்ணும், ஜெ.தீபாவுக்கு 91ஆவது எண்ணும் வழங்கப்பட்டன.

மதியம் 3 மணிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத் கதவு மூடப்பட் டது. பிறகு பதிவு எண் வரிசைப்படி ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு வேட்பு மனுக்கள் பெறப்பட்டன. நடி கர் விஷால் சுமார் 4 மணி நேரம் காத் திருந்து தனது வேட்புமனுவைத் தாக் கல் செய்தார்.

வேட்புமனுக்கள் அனைத்தையும் வாங்கி முடிக்க இரவு 9.45 மணியாகி விட்டது. அதன்பிறகு மொத்தம் எத்தனை வேட்புமனுக்கள் தாக்கல்





செய்யப்பட்டுள்ளன என்று கணக்கி டப்பட்டது. 145 வேட்பு மனுக்கள் தாக் கல் செய்யப்பட்டு இருந்தமை இரவு 10 மணிக்குத் தெரிய வந்தது.

ஒரே நாளில் மட்டும் 115 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது. தமிழக இடைத் தேர்தல் வரலாற்றில் ஒரே நாளில் இவ்வளவு சுயேச்சைகள் வேட்பு மனு தாக்கல் செய்தமை சாதனையாகக் கருதப்படுகிறது.

அதுவும் சுயேச்சை வேட்பாளர்கள் விதம், விதமாக வந்து தேர்தல் அலு வலக அதிகாரிகளைத் திணற வைத்து விட்டனர். கடைசி நிமிடத்தில் இவ்வ ளவு சுயேச்சைகள் வந்தமையில் அரசி யல் சூழ்ச்சி பின்னணியாக இருக்கலாம் என்று அரசியல் வட்டாரத்தில் பேசப் படுகிறது. குறிப்பிட்ட ஒரு வேட்பாளரை திணற வைக்கவே சுயேச்சைகள் களம் இறக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்றுக் காலை 10 மணிக்கு வேட்பு மனுக்கள் பரி சீலனை தொடங்கின. முதலில் அங்கீக ரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

அ.தி.மு.க. வேட்பாளர் மதுசூதனன், தி.மு.க. வேட்பாளர் மருதுகணேஷ், டி.டி.வி.தினகரன் ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதையடுத்து நடிகர் விஷால் உள்ளிட்ட சுயேச்சைகளின் மனுக்கள் மீதான பரிசீலனை நடந்தது. ஜெ. தீபாவின் மனு நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியுடன் மனுக்கள் பரிசீலனை நிறைவு பெற்றன. வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற நாளை கடைசி நாள். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளி யிடப்படும். அப்போது சுயேச்சைகளுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும்.

சின்னங்கள் ஒதுக்கீடு செய்யும் போது குழப்பம் ஏற்படலாம் என்று தெரிகிறது. ஒரே சின்னத்தை பலரும் கேட்கின்றமையால் இழுபறி ஏற்படும். கடந்த ஏப்ரல் மாதம் இடைத்தேர்தல் நடத்த ஏற்பாடு நடந்தபோது டி.டி.வி. தினகரனுக்குத் தொப்பி சின்னமும், ஜெ.தீபாவுக்கு படகு சின்னமும் ஒதுக் கீடு செய்யப்பட்டன. இந்த தடவையும் அதே சின்னத்தை பெற அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால், இந்த தடவை தொப்பி சின்னம் தங்க ளுக்கு வேண்டும் என்று இருப்துக்கும் மேற் பட்ட சுயேச்சைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதுபோல ஜெ.தீபா கேட்ட படகு சின்னத்தை நடிகர் விஷாலும் கேட் கிறார். எனவே, சுயேச்சைகளுக்குச் சின்னம் ஒதுக்கீடு செய்ய குலுக்கல் முறை கடைபிடிக்கப்படும் என்று தெரிய வந்துள்ளது.

இதனால் டி.டி.வி. தினகரன், நடிகர் விஷாலுக்கு அவர்கள் விரும்பும் சி ன்னம் கிடைக்குமா? என்பதில் கேள் விக்குறி எழுந்துள்ளது. (உ)

## குஜராத் தேர்தலில் பா.ஜ.க. - காங்கிரஸ் சம வாய்ப்பு

சமீபத்திய கருத்துக்கணிப்புகளின் படி, குஜராத் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற ஆளும் பா.ஜ.கவுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் சமவாய்ப்பு உள்ளதாகது என தெரிய வந்துள்ளது.

குஜராத்தில் வரும் 9 மற்றும் 14 ஆம் திகதிகளில் இரண்டு கட்டமாக சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பாரதிய ஜனதா கட்சிதான் ஆட்சியமைத்து வருகிறது.

தற்போது லோக்நிதி – சி.எஸ்.டி.எஸ். – ஏ.பி.பி. செய்திகள் நடத்திய இறுதிகட்ட கருத்துக்கணிப்புகளின் படி பா.ஜ.க., காங் கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் 43 சத விகித வாக்குகளைப் பெற்று சமநிலையில் உள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை வெளியான இந்த கருத்துக்கணிப்பு முடிவுகளின் படி, பா.ஜ.கவின் வாக்கு சதவிகிதம் 16 சத விகி தம் சில மாதங்களில் குறைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதே அமைப்புகள் கடந்த ஒகஸ்ட் மாதம் எடுத்த கருத்துக் கணிப்பில் பா.ஜ.க. 59 சதவிகித வாக்கு கள் பெறும் என்றும், நவம்பர் இறுதி வாரத் தில் எடுத்த கருத்துக்கணிப்பில் 43 சத விகித வாக்குகள் பெறும் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

குஜராத்தில் 22 ஆண்டுகளாக எதிர்க் கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சிக்கு இது முக்கியமான காலகட்டம். கடந்த ஒகஸ்ட் மாத கருத்துக்கணிப்பில், காங்கிரஸ் 29 சதவிகித வாக்குகள் பெறும் என்று தகவல் வெளியானது.

நவம்பர் இறுதி வாரத்தில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பின்படி அக் கட்சியின் வாக்குகள் 14 சதவிகிதம் உயர்ந்து 43 சதவிகிதமாக உள்ளது. எனவே பா.ஜ.க வும், காங்கிரஸும் சமமான வாக்குகள் பெறும் நிலையில் உள்ளன எனத் தெரி கிறது. (உ)

## காணாமற்போன மீனவர் எண்ணிக்கை; குழப்பமான தகவல்கள்

நாகர்கோவில்,டிசெ.06

குமரி மாவட்டத்தில் ஒக்கி புயலின் கோர தாண்டவத்தில் காணாமற்போன மீனவர்களின் எண்ணிக்கை குறித்து குழப்பகர மான தகவல்கள் வெளியாகி வருகின்றன.

புயல் தாக்கி நேற்றுடன் 6 நாள்கள் ஆன பின்பும் இயல்பு நிலை திரும்பவில்லை.

புயல் தாக்கும் முன்பு கடலுக் குச் சென்ற மீனவர்கள் பலரும் சூறாவளி காற்றில் சிக்கி மாய மாகி விட்டனர். அவர்களை இந்தி யக் கடற்படையினர் மற்றும் கட லோரக் காவல் படையினர் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

தமிழக அரசின் கணக்குப்படி குமரி மாவட்டத்தில் 1229 விசைப் படகுகள் உள்ளன என்றும் இதில் மாயமான 39 படகுகளில் 6 படகுகள் திரும்பி வந்து விட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர, 945 படகுகள் பாதுகாப்பாக உள்ளன. 182 படகு களில் சென்ற 2124 மீனவர்கள் மீட்கப்பட்டு கேரளா, கர்நாடகா, குஜராத், கோவா, மராட்டியம் மற் றும் லட்சத்தீவுகளில் பாதுகாப் பாகத் தங்க வைக்கப்பட்டுள்ள னர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி குமரி மாவட்ட கலெக்டர் சஜ்ஜன் சிங் சவான் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை யில் 33 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 70 மீனவர்கள் மட்டும் இன்னும் கரை திரும்பவில்லை, அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது, இந்திய கடற்படை, கடலோர காவல்படை மூலமாக அவர்களை மாவட்ட நிர்வாகம் தேடி வருகிறது என்று தெரிவித்து உள்ளார்.

ஆனால், குமரி மாவட்ட மீனவ அமைப்புகள் மற்றும் மீனவ பிரதி நிதிகள் மாவட்ட நிர்வாகத்தின் தகவலை மறுத்துள்ளனர். குமரி மாவட்டத்தில் மாயமான மீனவர் களின் எண்ணிக்கை அரசு அறி விப்பை காட்டிலும் அதிகம் என்று கூறியுள்ளனர்.

இது பற்றி வள்ளவிளை பாதி ரியார் பார்வின் கூறும்போது, குமரி மாவட்டத்தில் மாயமான மீன வர்களின் எண்ணிக்கை சுமார் 1900 இற்கும் அதிகமாக இருக் கும். இதில் வள்ளவிளை பகுதி யில் இருந்து மட்டும் 54 படகுகள் பற்றிய தகவல் கிடைக்கவில்லை.

இதில் 650 மீனவர்கள் இருந் தனர். இவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. அவர் களை கண்டுபிடித்து தர வேண் டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். மத்திய அரசுக் கும் தகவல் கொடுத்துள்ளோம். – என்றார்.

இது போல மாவட்டம் முழுவ தும் சுமார் 1900 இற்கும் மேற் பட்டோர் மாயமாகி இருக்கலாம் என பல்வேறு மீனவ அமைப்பி னர் கூறுகிறார்கள்.

இதற்கிடையே கேரள கடற் கரையில் கடந்த 5 நாள்களில் மட்டும் 83 மீனவர்களின் பிணங் கள் கரை ஒதுங்கி உள்ளன. இதில் 2 பேர் குமரி மாவட்டத்தைச் சேர்ந் தவர்கள். ஒருவர் தூத்துக்குடி மாவட்டத்தையும், இன்னொருவர் நாகப்பட்டினத்தைச் சேர்ந்தவர். இவர்களை தவிர 71 பேரின் உடல் கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இன்னும் 11 பேரின் சடலங்கள் அடையாளம் காண முடியாத அள வுக்கு சிதைந்துள்ளன. இவை திருவனந்தபுரம் அரசு ஆஸ்பத்தி ரியில் வைக்கப்பட்டுள்ளன.

### வடகொரிய அச்சுறுத்தலுக்குப் பதிலடியாக

# அமெ. – தென்கொரியா இணைந்து பிரமாண்ட வான்வழிப் போர் ஒத்திகை

சியோல்,டிசெ.06

வடகொரியாவின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து அமெரிக்காவும், தென்கொரியாவும் இணைந்து 5 நாள் பிரமாண்ட வான்வழி போர் ஒத்திகையை நேற்றுமுன்தினம் தொடங்கின. இதில் 230 இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

கடந்த மாதம் 29ஆம் திகதி வடகொரியா, 'ஹவாசாங்-15' என்னும் அதிநவீன ஏவுகணையை வெற்றிகரமாக செலுத்தியது. கண்டம் விட்டு கண்டம் பாயும் இந்த ஏவுகணை அமெரிக்காவின் எந்த நகரத்தையும் தாக்கி அழிக்கும் சக்தி வாய்ந்தது. இந்த சோதனையால் வடகொரியாவின் அண்டை நாடுகளான தென்கொரியா, ஜப்பான் ஆகியவற்றுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளது.

ஹவாசாங்-15 ரக ஏவுகணை சோதனையால் வடகொரியா சர்வ வல்லமை பெற்ற அணு ஆயுதநாடாகத்திகழ்கிறது என்று பிரகடனம் செய்து அந்நாட்டின் தலைவர் கிம் ஜாங் அன் கொக்கரிக்கவும் செய்தார். அந்த நாட்டு மக்களும் இதை மிகப்பெரும் சாதனை என்று கூறி கடந்த 2 ஆம் திகதி கொண்டாடி மகிழ்ந்தனர்.




**பிரமாண்ட போர் ஒத்திகை**

ஹவாசாங்-15 ஏவுகணை சோதனை தனது நாட்டுக்கு மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்பதை உணர்ந்த அமெரிக்கா இதற்கு உடனடியாக கடும் கண்டனம் தெரிவித்தது. குடியரசு கட்சியை சேர்ந்த பிரபல எம்.பி. லின்ட்சே கிராஹாம் கூறுகையில், வடகொரியாவின் இந்த நடவடிக்கையால் அந்த நாட்டின் மீது முன்கூட்டியே அமெரிக்கா போர் தொடுக்கும் நிலை உருவாகியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், வடகொரியாவின் ஏவுகணை சோதனைக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து கொரிய தீப கற்ப பகுதியில் பிரமாண்ட வான் வழி போர் ஒத்திகையை நேற்று முன்தினம் தொடங்கின.

**வடகொரியா அதிர்ச்சி**

5 நாள்கள் நடைபெறும் இந்த போர் ஒத்திகையில், அமெரிக்காவின் அதிநவீன ரக போர் விமானங்களான எவ்-22 ராப்டர், எவ்-35 உள்ளிட்ட 230 இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள் கலந்துகொள்கின்றன.

தென்கொரியா தன் பங்கிற்கு எவ்-15 கே., கே.எவ்-16, எவ்-5 ஆகிய நவீன போர் விமானங்களைக் களம் இறக்கி உள்ளது. இது தவிர இரு நாடுகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான விமானப்படை வீரர்களும் போர் ஒத்திகையில் இணைந்துள்ளனர்.எவ்-22 ராப்டர் ரக போர் விமானங்கள் அதிகபட்சமாக மணிக்கு 2,410 கி.மீ. வேகத்தில் பறக்கக்கூடியவை. சுமார் 3 ஆயிரம்கி.மீ. தூரம்வரை தொடர்சியாக பறந்து குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தும் வலிமையும் கொண்டவை.

போர் ஒத்திகையில் ஈடுபடுவதற்காக இந்த ரகத்தை சேர்ந்த 6 போர் விமானங்களை தென்கொரியாவுக்கு அமெரிக்க விமானப்படை அனுப்பி வைத்துள்ளது.

அமெரிக்கா, தென்கொரியா வான்வழி போர் ஒத்திகையால் வடகொரியா அதிர்ச்சி அடைந்துள்ளது. இது வழக்கமான போர் ஒத்திகை என்றாலும் கூட இந்த அளவிற்கு வான்வழியில் இரு நாடுகளும் போர் விமானங்களை பயன்படுத்துவதால் அணு ஆயுத போரில் ஈடுபட எம்மை அமெரிக்கா வம்புக்கு இழுக்கிறது என்று வடகொரியா குற்றம் சாட்டி உள்ளது. (உ)

# ஏமன் முன்னாள் அதிபர் சலே படுகொலை செய்யப்பட்டார்?

ஏமன் முன்னாள் அதிபர் அலி அப்துல்லா சலே கொல்லப்பட்டார் என ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஏமன் நாட்டில் 33 ஆண்டுகள் அதிபராக இருந்தவர் அலி அப்துல்லா சலே. பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக, இவர் 2012ஆம் ஆண்டு பதவி விலகினார்.

பின்னர், 2015ஆம் ஆண்டு, அப்தராப்பு மன்சூர் ஹடி அதிபராக பதவி ஏற்றார். ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள், அவருக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் குதித்தனர்.

இதனால், சவுதி அரேபியாவுக்கு மன்சூர் ஹடி தப்பிச்சென்றார். அவருக்கு ஆதரவாக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படை, ஹவுதி கிளர்ச்சியாளர்களுடன் சண்டையில் குதித்தது. அதே சமயத்தில், பதவி இழந்த அதிபர் அலி அப்துல்லா சலே தலைமையிலான படைகளும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுடன் கைகோத்து, கூட்டுப்படைக்கு எதிராக போரிட்டன.

**குண்டு வைத்து கொலை**

இதற்கிடையே, கடந்த வாரம் திடீர் திருப்பமாக, அலி அப்துல்லா சலேவுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான உறவு முறிந்தது. இருதரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் எதிர்த்து போரிட்டனர். இந்நிலையில், அலி அப்துல்லா சலே படைகளுக்கு எதிராக முன்னேறி வந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள், தலைநகர் சனா அருகே உள்ள அலி அப்துல்லா சலே வீட்டை குண்டு வைத்துத் தகர்த்தனர். இதில், சலே கொல்லப்பட்டார் என கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள வானொலியிலும், அல்-மசிரா தொலைக்காட்சியிலும் நேற்றுமுன்தினம் அறிவித்தனர்.

**சடலம் காண்பிக்கப்பட்டது**

அலி அப்துல்லா சலேவின் உடல் என்று கூறி, தலைக்காயத்துடன் ஒரு சடலம் காண்பிக்கப்பட்டது. அதை போர்வையால் சுற்றி, கிளர்ச்சியாளர்கள் இழுத்து செல்வது, அந்த வீடியோ காட்சியில் காண்பிக்கப்பட்டது. அப்போது, அவர்கள் சலேவுக்கு எதிராகக் கோலமிட்டனர்.

சலேவுடன் அவருடைய ஆதரவாளர்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டனர் எனவும் கிளர்ச்சியாளர்களின் தொலைக்காட்சியில் வெளியான அறிவிப்பு, பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இருப்பினும், சலேவின் படையை சேர்ந்த யாரும் இச் செய்தியை உறுதி செய்யவில்லை.

# 6 முஸ்லிம் நாட்டவருக்கு அமெ. பயணிக்கத் தடை

### ட்ரம்ப் உத்தரவுக்கு நீதிமன்று அனுமதி

வொஷிங்டன்,டிசெ.06

ஆறு முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவிற்குப் பயணம் செய்வதற்குத் தடை என்ற அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் உத்தரவை முழு அளவில் செயற்படுத்த அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் டொனால்ட் ட்ரம்ப், அதிரடியாக அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

இந்த நிலையில், ஈரான், லிபியா, சோமாலியா, சிரியா மற்றும் ஏமன் ஆகியவை உட்பட 6 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ள ட்ரம்ப் தடை விதித்து கடந்த செப்ரெம்பரில் அறிவிப்பு வெளியிட்டார். ட்ரம்பின் இந்த முடிவு முஸ்லிம் மக்களுக்கு எதிரானது எனப் பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. ட்ரம்பின் பயண தடை அறிவிப்புக்கு இடைக்கால தடை வழங்கி உயர் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதிகள் ரூத் பேடர் கின்ஸ்பர்க் மற்றும் சோனியா சோட்டோமேயர், ட்ரம்பின் கொள்கை முடிவை முழு அளவில் செயற்பட அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளனர். (உ)

# தான் ஓரினச் சேர்க்கையாளன் என அறிவித்து தன் ஜோடியையும் காட்டினார் ஆஸியின் எம்.பி.

### அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடந்த பரபரப்புச் சம்பவம்

சிட்னி,டிசெ.06

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் ஓரினச் சேர்க்கை திருமணம் குறித்து விவாதம் நடைபெற்றபோது எம்.பி. ஒருவர் திடீரென்று எழுந்து தான் ஓர் ஓரின சேர்க்கையாளன் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் ஓரினச் சேர்க்கை திருமணத்துக்கு அங்கீகாரம் அளிக்க வகை செய்யும் பிரேரணை மீதான இறுதி வாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் சபையில் நடந்தது. அப்போது எம்.பி.க்களிடையே கடுமையான, காரசார விவாதம் நடைபெற்றது.





லிபரல் கட்சியைச் சேர்ந்த எம்.பி. டிம் வில்சன் (வயது 37) என்பவர் திடீ ரென எழுந்து ஓரினச் சேர்க்கைத் திரு மணத்துக்கு ஆதரவாகப் பேசினார். அப்போது தான் ஓர் ஓரினச் சேர்க்கையாளன் எனப் பகிரங்கமாக அவர் அறிவித்தார்.

அத்துடன், அவர் நிற்கவில்லை. தனக்கு ஓரினச் சேர்க்கையாளர் ஒருவருடன் திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளது என்றார். மேலும் நிச்சயதார்த்தம் நடந்தமைக்கு அடையாளமாகத் தனது வலது கைவிரலில் அணிவித்திருந்த மோதிரத்தையும் அவர் காட்டினார்.

மேலும், தனது ஓரின சேர்க்கை ஜோடியையும் டிம் வில்சன் பகிரங்கமாக அறிவித்தார். பார்வையாளர்கள் மாடத்தை நோக்கி பேசிய அவர், "அதோ பாருங்கள் அங்கு அமர்ந்திருக்கும் ரியான் பேட்ரிக் போல்ஜர்தான் எனது ஜோடி" – என்றார்.

அவரைப் பார்த்து என்னை திருமணம் செய்து கொள்கிறீர்கள் அல் லவா? – என்றார். அதை ஆமோதிக்கும் வகையில் அவர் மௌனமாக சிரித்தப்படியே தலையை அசைத்தார். மேலும் தனது கைவிரலில் அணிந்திருந்த நிச்சயார்த்த மோதிரத்தை தூக்கிக் காட்டினார்.

அதைத் தொடர்ந்து அவையில் இருந்த எம்.பிக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அந்த ஜோடிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

ஓரினச் சேர்க்கையாளர் திருமண சட்டப் பிரேரணை நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் ஏற்கனவே நிறைவேறிவிட்டது. பிரதிநிதிகள் சபையில் தற்போது விவாதம் நடைபெறுகிறது. இந்த வார இறுதியில் அது நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கோஹ்லி, டோனியின் வருட சம்பளம் 27 கோடி ரூபாவாக உயர்த்தப்படுகிறது!



மும்பை,டிசெ.06

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களின் சம்பளம் 6 மடங்கு வரை உயர்த்தப்படுவதால், 'ஏ' தரத்தில் உள்ள வீரர்களான அணித்தலைவர்களான விராட் கோஹ்லி, டோனி ஆகியோருக்கு வருடத்துக்கு இந்தியப் பணத்தில் 12 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் சுமார் 27 கோடி ரூபா) வரை கிடைக்கும்.

கிரிக்கெட் வீரர்கள் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பி.சி.சி.ஐ சம்பளம் வழங்கி வருகிறது.

'ஏ' தர வீரர்களுக்கு ரூ.2 கோடியும், 'பி' தர வீரர்களுக்கு ரூ.1கோடியும், 'சி' தர வீரர்களுக்கு ரூ.50 லட்சமும் வழங்கப்பட்டு வருகிறது.

கிரிக்கெட் வீரர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் கடந்த செப்ம்பர் மாதத்துடன் முடிவடைந்தது. இதையடுத்து புதிய ஊதிய ஒப்பந்தத்தை மேற் கொள்ள இந்தியக் கிரிக்கெட் சபை முடிவு செய்திருந்தது.

இதற்கிடையே வீரர்களின் சம்பளத்தை உயர்த்துமாறு அணித் தலைவர் விராட் கோஹ்லி, சிரேஷ்ட வீரர் டோனி, பயிற்சி யாளர் ரவிசாஸ்திரி ஆகியோர் சபையின் நிர்வாக குழுத் தலைவர் வினோத் ராயைச் சந்தித்து கோரிக்கை வைத்தனர்.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து வீரர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். 4 மணி நேரம் நடந்த இது தொடர்பான பேச்சில் ஊதியத்தை உயர்த்த முடிவு செய்யப்பட்டது. நிர்வாக குழுவும் இதை ஒருமன தாக ஏற்றுக்கொண்டது.

இந்த நிலையில் கிரிக்கெட் வீரர் களின் சம்பளம் 6 மடங்கு வரை உயர்த் தப்படுகிறது. இதை கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.' ஏ' தரத்தில் உள்ள வீரர்களின் சம்பளம் 6 மடங்காக உயர்த்தப்படும் போது இனி அவர் களுக்கு ரூபா 12 கோடி வருடத்துக்கு கிடைக்கும்.

இந்த தரத்தில் விராட் கோஹ்லி, டோனி, அஸ்வின், ஜடேஜா, ரகானே, புஜாரா, முரளி விஜய் ஆகிய 7 வீரர்கள் உள்ளனர். இவர்கள் இதுவரை ரூபா 2 கோடி பெற்று வந்தனர். இனி இவர்களது சம்பளம் ஆண்டுக்கு ரூபா 12 கோடியாக உயர்த் தப்படுகிறது.

அதே நேரத்தில் அணித்த லைவருக்கு இதில் இருந்து அதிகமான ஊதியம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'பி' தரத்தில் ஒப்பந்தத்தில் உள்ள வீரர் களுக்கு ஆண்டுக்கு இனி ரூபா 8 கோடியும், 'சி' தர வீரர்களுக்கு ரூபா 4 கோடியும் வழங்கப் படும் என்று கூறப்படுகிறது.

'பி' தரத்தில் ரோகித் சர்மா, ராகுல், முகமது ஷமி உள்ளிட்ட 9 வீரர்களும், 'சி' தரத்தில் தவான், மனிஷ் பாண்டே உள்ளிட்ட 16 வீரர் களும் உள்ளனர்.

புதிய ஊதிய ஒப்பந்தம் அறிவிக்கும் போது சில வீரர்களுக்கு முன்னேற்றமும், சிலருக்கு பின்னடைவும் ஏற்படலாம் என்று கருதப்படு கிறது.



## இலங்கைக்கு எதிரான ரி20யிலும் கோஹ்லிக்கு ஓய்வு வழங்க முடிவு

### இந்திய அணியில் தமிழக வீரர் வாஷிங்டன் சுந்தர்



புதுடில்லி,டிசெ.06

இலங்கைக்கு எதிரான மூன்று போட்டி கள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடருக் கான இந்திய அணியில் தமிழக வீரர் வாஷிங்டன் சுந்தர் இடம்பிடித்துள்ளார்.

இந்தியா – இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடர் நடை பெற இருக்கிறது.

ஏற்கனவே ஒருநாள் கிரிக்கெட் போட் டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள் ளது. தொடர்ந்து விளையாடி வந்த விராட் கோஹ்லிக்கு அந்த ஒரு நாள் தொடரில் ஓய்வுகொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலை யில் நேற்று ரி20 கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஒரு நாள் கிரிக்கெட் தொடரை தொடர்ந்து ரி20 கிரிக்கெட் தொடரிலும் விராட் கோஹ்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ரோகித் சர்மா அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள் ளார். 18 வயதே ஆன தமிழகத்தைச் சேர்ந்த பல்துறை ஆட்டக்காரர் வாஷிங் டன் சுந்தர் முதன்முறையாக இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.

இலங்கை தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம்:–

ரோகித் சர்மா (தலைவர்), லோகேஷ் ராகுல், ஷ்ரேயாஸ் அய்யர், மணீஷ் பாண்டே, தினேஷ் கார்த்திக், டோனி, ஹார்திக் பாண்டியா, வாஷிங்டன் சுந்தர், சாஹல், குல்தீப் யாதவ், தீபக் ஹூடா, பும்ரா, மொகமது சிராஜ், பாசில் தம்பி, ஜெய்தேவ் உனத்கட்.

இந்தியா – இலங்கை இடையிலான முதல் ரி20 கிரிக்கெட் போட்டி வருகிற 20ஆம் திகதி கட்டாக்கில் தொடங்கு கிறது. 2ஆவது போட்டி இந்தூரில் 22 ஆம் திகதியும், 3ஆவது மற்றும் கடைசி போட்டி மும்பையில் 24 ஆம் திகதியும் நடக்கின்றன.

## தென்னாபிரிக்காவில் விளையாடும் இந்திய கிரிக்கெட் அணி அறிவிப்பு

புதுடில்லி,டிசெ.06

தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் ஜனவரி 5 ஆம் திகதி தொடங்கும் தென் னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொட ருக்குரிய 17 வீரர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள், ரி20களில் கலக்கி வரும் ஜஸ்ப்ரீத் பும்ராவுக்கு இந்த அணியில் இடமளித்து டெஸ்ட் போட்டிகளில் ஆட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதே போல் விக்கெட் கீப்பர்/துடுப்பாட்ட வீரர் பார்த்திவ் படேல் அணியில் சேர்க் கப்பட்டுள்ளார்.

இந்திய அணி வருமாறு:–

விராட் கோஹ்லி (அணித் தலைவர்), ராகுல், விஜய், தவான், புஜாரா, ரஹானே (உதவித் தலைவர்), ரோஹித் சர்மா, விருத்திமான் சஹா, அஸ்வின், ஜடேஜா, பார்த்திவ் படேல், ஹர்திக் பாண்டியா, புவ னேஷ்வர் குமார், உமேஷ் யாதவ், மொக மட் ஷமி, இசாந்த் சர்மா, ஜஸ்பிரித் பும்ரா.

குல்தீப் யாதவ்வை விட்டு விட்டு தென் னாபிரிக்கா செல்வது அணித்தேர்வில் மிகப்பெரிய தவறு என்று கூறப்படுகின் றது. தரம்சலா போன்ற 'ஸ்பின்' ஆதரவளிக் காத களத்திலும் கூட ஆஸிக்கு எதிராக முதல் நாளில் 4 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றியுள்ளார் குல்தீப். மேலும் அணி விக்கெட்டுக்காக கஷ்டப்படும் போதெல் லாம் விக்கெட்டுகள் எடுத்துக் கொடுப்பவர் குல்தீப் யாதவ். அவரை விட்டமை கடுமை யான விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

## மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் ஹோல்டருக்குத் தடை!




நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் போது பந்துவீச கூடு தல் நேரம் எடுத்துக் கொண்டமைக்காக மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் ஜேசன் ஹோல்டருக்கு ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடை விதிக் கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 67 ஓட்டகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அந்த அணி முன்னிலை வகிக்கிறது.

இதில் பந்துவீச ஒதுக்கப்பட்ட நேரத்தில் மேற்கிந்திய அணி 3 ஓவர்கள் குறைவாக வீசியிருந்தது.

இதையடுத்து ஹோல்டருக்கு போட்டி ஊதியத்தில் 60 சதவீதம் அபராதமும் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடையும் விதிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய மேற்கிந்திரய வீரர்களுக்கு போட்டி ஊதி யத்தில் 30 சதவீதம் அபராதம் விதிக் கப்பட்டுள்ளது.

இதனால் வரும் 9ஆம் திகதி அன்று ஹமில்டனில் தொடங்கவுள்ள 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் ஹோல்டர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# டில்லி டெஸ்டிலும் இலங்கை தோல்வியை நோக்கி...



டில்லி, டிசெ.06

டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் இலங்கை – இந்திய அணிகளுக்கு இடையில் நடைபெறும் மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் இறுதி நாளான இன்று இலங்கை மீண்டும் தோல்வி என்ற சோகமான முடிவை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் 410 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றாலேயே வெற்றி என்ற அளவில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி நேற்று ஆட்டநேர முடிவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து ஆக 31 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது.

ஆட்டத்தின் இறுதிநாளான இன்று கைவசம் எஞ்சியுள்ள ஏழு விக்கெட்டுகளுடன் இன்னும் மிச்சமுள்ள 379 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றி யீட்ட வேண்டும். இல்லையேல் இன்று முழுநாளும் துடுப்பெடுத்தாடி ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடிக்கவேண்டும் என்ற இக்கட்டு இலங்கைக்கு.

இன்று மழைபோன்ற இயற்கைக் குழப்பங்கள் கைகொடுத்தாலன்றி இலங்கை இந்த டெஸ்ட் ஆட்டத்திலும் தோல்வியைத் தழுவுவது தவிர்க்க முடியாதது என விமர்சகர்கள் ஏற்கனவே கருத்து வெளியிட்டுள்ளனர்.

மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரில் இலங்கை ஏற்கனவே 1–0 என்ற கணக்கில் பின்னணியில் இருக்கின்றமை தெரிந்ததே.

இந்திய – இலங்கை அணிகளுக்கிடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் டில்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் களம் இறங்கிய இந்திய அணி 7 விக்கெட் இழப்பிற்கு



536 ஓட்டங்கள் குவித்து முதல் இன்னிங்ஸை ‘டிக்ளேர்’ செய்தது. விராட் கோஹ்லி 243 ஓட்டங்களும், முரளி விஜய் 155 ஓட்டங்களும் குவித்தனர். இலங்கை அணி தரப்பில் சண்டகன் 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் இலங்கை முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. இந்தியாவின் அபாரப் பந்து வீச்சால் நேற்றுமுன்தினம் 3ஆவது நாள் ஆட்ட முடிவில் இலங்கை 9 விக்கெட் இழப்பிற்கு 356 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. சண்டிமல் 147 ஓட்டங்களுடனும், சண்டகன் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய இலங்கை 373 ஓட்டங்கள் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மத்யூஸ் 111 ஓட்டங்களும், சந்திமல் 164 ஓட்டங்களும் சேர்த்தனர். இந்திய அணி



சார்பில் இசாந்த் சர்மா, அஸ்வின் தலா 3 விக்கெட்டுக்களும், மொகமது ஷமி மற்றும் ஜடேஜா தலா 2 விக்கெட்டுக்களும் கைப்பற்றினார்கள்.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 163 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இந்த ஓட்டங்களுடன் இந்தியா 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. தவான் (67), விராட் கோஹ்லி (50), புஜாரா (49), ரோகித் சர்மா (50 ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் ஆட்டத்தால் 52.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில் 2ஆவது இன்னிஸை இந்தியா ‘டிக்ளேர்’ செய்தது.

இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து இந்தியா 409 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதனால் இலங்கை அணியின் வெற்றிக்கு 410 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்துள்ளது இந்தியா. 410 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

ஆனால் நேற்று மாலை ஆட்ட நேரத்திலேயே இலங்கையின் மூன்று விக்கெட்டுக்கள் மளமளவென்று வீழ்ந்தன. இலங்கை 31 ஓட்டங்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

# பரபரப்பான இறுதிநாள் ஆட்டத்தில் ‘ஆஷஸ்’ இரண்டாவது டெஸ்ட்...

அடிலெய்ட்,டிசெ.06

ஆஸ்திரேலிய – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் கிரிக்கெட் தொடரில் அடிலெய்டின் தற்போது நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்டின் இறுதி நாள் ஆட்டமான இன்று, போட்டி பரப்பரப்பான – சுவாரஸியமான – கட்டத்தை எட்டியிருக்கின்றது.

இரண்டு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பு என்ற நிலையை ஆட்டம் அடைந்துள்ளது.

முதலாவது இன்னிங்ஸில் 442 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலையை எட்டிப்பிடித்த ஆஸ்திரேலிய அணி, இரண்டாவது இன்னிங்ஸில் அண்டர்சன் மற்றும் வோக்ஸின் பந்து வீச்சில் ஆக 138 ஓட்டங்களில் சுருண்டதில் இங்கிலாந்து முன்னிலை பெற்று வெற்றிக்கான வாய்ப்பை ஈட்டியிருக்கின்றது.

இன்றைய இறுதிநாள் ஆட்டத்தில் தன் கைவசம் எஞ்சியுள்ள ஆறு விக்கெட்டுகளுடன் 178 ஓட்டங்கள் என்ற இலக்கைப் பெறுமானால் வெற்றி உறுதி என்ற நிலையில் இங்கிலாந்து அணி உள்ளது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 442 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் ஆக 227 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 215 ஓட்டங்கள் பின்தங்கிநின்றது.

‘பெலோ ஒன்’ செய்ய விரும்பாத ஆஸி அணி நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தைத் தொடக்கி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவின் போது ஒரு விக்கெட் இழப்புக்கு 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால் நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்தின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய ஆஸி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 138 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. கவாயா, ஸ்டார்க் ஆகியோர் தலா இருபது ஓட்டங்களைப் பெற்றனர். அண்டர்சன் 42 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் வோக்ஸ் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பின்னர் நேற்று 354 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த





இங்கிலாந்து அணி நேற்று ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களைப்பெற்றது.

இன்றைய இறுதி நாள் ஆட்டத்தில் கைவசம் உள்ள ஆறு விக்கெட்டுகளுடன் எஞ்சிய 178 ஓட்டங்களைப் பெற்றால் இங்கிலாந்தின் வெற்றி உறுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த ஓட்ட இலக்கை எட்ட முடியாமல் இங்கிலாந்து ஆட்டமிழக்குமனால் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெறும்.

ஒரு தீர்க்கமான – சுவாரஸியமான – பரபரப்பான – கட்டத்தை இந்த டெஸ்ட் எட்டியுள்ளது.

ஏற்கனவே முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றமை தெரிந்ததே.

## காவலர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களின் பிடியிலிருந்து நேற்று அதிகாலை 4 மணியளவில் தப்பி ஓடினர்.

எனினும் 2 மணிநேரத் தேடுதலின் பின்னர் அவர்கள் இருவரையும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீண்டும் பிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றச் சான்றுப் பொருள்கள் அறையை உடைத்துக் கஞ்சா திருடிய குற்றச்சாட்டில் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவரே இவ்வாறு தப்பினர்.

நீதிமன்றப் பாதுகாப்பில் இருந்த சான்றுப்பொருளான ரூபா 27 இலட்சம் பெறுமதியான கஞ்சா போதைப்பொருள் கடந்த ஆண்டு திருடப்பட்டது. சம்பவம் தொடர்பில் மூவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து சான்றுப் பொருளான கஞ்சாவும் மீட்கப்பட்டது.

சந்தேக நபர்கள் மூவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள்மூவருக்கும் எதிராக திருட்டுக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு விசாரணைக்கு நேற்றுத் திகதியிடப்பட்டது. அதனால் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் முற்படுத்த வவுனியா சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நேற்று அதிகாலை 4 மணிக்குப் புறப்படத் தயாராகினர். சந்தேக நபர்கள் மூவரையும் சிறைச்சாலை வாகனத்தில்ஏற்றமுற்பட்டபோது இருவர் தப்பித்தனர்.

2 மணிநேரத் தேடுதலின் பின்னர் வவுனியா நகரப் பகுதியில் மறைந்திருந்தபோது அவர்கள் இருவரும் மீண்டும் பிடிக்கப்பட்டனர் எனச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஆயுதம் தாங்கிய சிறைச்சாலை உத்தியோகத்தர்களின்பாதுகாப்புடன் சந்தேக நபர்கள் நேற்று மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர்.

இந்தநிலையில்மூவருக்கும் எதிரான தண்டனைத் தீர்ப்பு எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வழங்கப்படும்எனயாழ்ப்பாணம் மேல்நீதிமன்றநீதிபதிமா.இளஞ்செழியன் அறிவித்தார். அதுவரை சந்தேகநபர்களின் விளக்கமறியல் மன்றினால் நீடிக்கப்பட்டது. (ஐ)

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அபயராமயவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

ஆட்சிபீடம் ஏறும்போது வெளிநாட்டுச் சக்திகளுக்கும் குறிப்பாக தமிழ்த் தலைமைகளுக்கும் அளித்த வாக்குறுதிகளைநிறைவேற்றும்நோக்கில், அரசு அரசமைப்பை உருவாக்குகின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டிய அவசியம் தற்போதுகிடையாது.அரசமைப்புமுறைமையானது எனவும் அதனால் அதைப் புதுப்பிக்க வேண்டும் எனவும்சிலர்வாதிடுகின்றனர்.

அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் கிரமமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்கம் சீர்குலைக்கப்படும்.

நீண்ட காலத்திற்கு நல்லிணக்கத்தை மீளவும் ஏற்படுத்திக்கொள்ள முடியாதநிலைமை ஏற்படும் – என்றார். (ஐ)

## இடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

அவசரநிலைமைகள்ஏற்படும் பட்சத்தில் அதை எதிர்கொள்வது தொடர்பில் ஆராயும் பொருட்டு இந்தக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளதீவகவலயங்கள் மற்றும் கடலோரப் பகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில் துறைசார் அதிகாரிகள்இங்குஅறிவுறுத்தப்பட்டனர்.

சூறாவளி அல்லது வெள்ள இடர்ஏற்படும்பட்சத்தில் அதற்கு முகம் கொடுக்க முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவிகளையும் பெற்றுக்கொள்ளப் பாதுகாப்புத் தரப்பில் இங்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மீனவர்களை மறு அறிவித்தல்வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதை சகல மீனவர்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலர் கடற்தொழில் நீரியல் வளஅதிகாரிகளைப்பணித்தார்.

அத்துடன் உலர் உணவு, மருத்துவம், சுகாதாரம், போக்குவரத்து, ஆகிய சகல அத்தியாவசியத் துறை சார்ந்த அதிகாரிகளையும் எந்த நேரமும் விழிப்பாக இருக்குமாறும் கோரப்பட்டது.

பாடாசாலைமாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப்பிரதிப்பணிப்பாளர் ரவி சங்கரப்பிள்ளை, மாவட்ட மேலதிக அரச அதிபர் சுகுணவதி தெய்வேந்திரம் மற்றும் முப்படையினர் பிரதேச செயலாளர்கள் துறை சார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ)

## 2018 வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்று மாகாண சபையில் முன்மொழிந்தார்.

வடக்கு மாகாண சபையின் 111 ஆவது அமர்வு நேற்றுக் கைதடியிலுள்ளபேரவைச்செயலகத்தில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம் பெற்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிதியமைச்சர்என்றஅடிப்படையில் வடக்கு மாகாண சபையின் 2018ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று நியதிச்சட்ட அறிக்கையைச் சபையில் முன்மொழிந்தார்.

மத்திய அரசின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாண சபைக்கு என ஒதுக்கப்பட்டுள்ள 29 ஆயிரத்து 754 மில்லியன் 64 ஆயிரம் ரூபா நிதியை அவையில் முன்மொழிந்த முதலமைச்சர், அதற்கான எல்லைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இதன் மீதான அமைச்சுக்களின் விவாதம் எதிர்வரும் 12ஆம், 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் இடம்பெறும் என அவைத்தலைவர் அறிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் முதலாவது அரசின் இறுதி வரவு – செலவுத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை காலைமீன் பிடிக்கச்சென்ற மன்னார் மீனவர்களில் சுமார் 25 பேரைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர். இதனால் அங்கு பெரும் பதற்ற நிலை தோன்றியது.

இவர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமைமன்னார்நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா அவர்களைவிடுதலைசெய்தார்.

தாழ்வுபாட்டில் நேற்று முன்தினம் 5 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 25 மீனவர்களைக் கடற்படையினர் கடலில் வைத்துக் கைது செய்து கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

இதனை அறிந்த கிராம மக்கள்அனைவரும்ஒன்றுதிரண்டு கடற்படை முகாமை முற்றுகையிட்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன்மீனவர்களைவிடுதலை செய்யுமாறும்கோரியிருந்தனர்.

இந்நிலையில் அங்கு வந்த பொலிஸார், கைதான மீனவர்களைப் பொறுப்பேற்றுமன்னார் பொலிஸ்நிலையத்துக்குஅழைத்துச் சென்று பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்துக்கு வருமாறு பணித்தனர்.

மீனவர்கள் 25 பேரும் நேற்றுக் காலை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

25 மீனவர்களும் மீன்பிடிப்பதற்கான அனுமதிப் பத்திரத்தைத் தம் வசம் வைத்திருக்காமையாலேயே கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படையினர் மன்றில் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் எவ்வித நிபந்தனைகளும் இன்றி மீனவர்கள் 25 பேரையும் விடுதலை செய்தார். (ஐ)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதேஅவர்மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

சர்வதேசத்தீவிரவாதிகள் மற்றும் தீவிரவாதக் குழுக்கள் இலங்கைகுள் உட்பிரவேசிக்க முடியாத வகையில் விசேட பாதுகாப்புப் பொறிமுறை பலப்படுத்தப்பட்டுள்ளது. இன்ரர்போல் மற்றும் இலங்கைப் பாதுகாப்புத்துறை, குடிவரவு,குடியகல்வு திணைக்களத்துடன்இணைந்து இந்தப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

யுத்தம் தொடர்பில் எமக்கு நேரடி அனுபவம் உண்டு. அண்மைக்காலமாக சில ஆசிய நாடுகளில்தீவிரவாதத்தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. அதன் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

'இன்ரர்போல்' அதிகாரிகள் 24 மணித்தியாளங்களும் தகவல்களை பரிமாறிக்கொள்வதால் எமக்குப் பாதுகாப்பைப் பலப்படுத்த முடிகிறது. உயரிய தொழில்நுட்பத்துடன் 'இன்ரர்போல்' எமக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர் – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளியிட்டுள் ளது. அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மாத்தறை மாவட்டத்தில்8உறுப்பினர்கள்நாடாளுமன்றுக்குத் தெரிவாகும் நிலையில் இந்த ஆண்டு வாக்காளர் பட்டியலின்அடிப்படையில்அந்த எண்ணிக்கை 7ஆகக் குறைவடைந்துள்ளது. அந்த ஒரு உறுப்பினருக்கான ஆசனம் மொனராகலை மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள் ளது. இதுவரை 5 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு வந்த மொனராகலை மாவட்டத்தின் எண்ணிக்கை 6 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## குற்றத்தடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை நிறைவேற்றத் தவறிய யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பொலிஸ் அதிகாரியை நீதிவான் நேற்றுக் கண்டித்தார்.

அத்துடன், நீதிமன்றக் கட்டளையை உதாசீனம் செய்த குற்றச்சாட்டில் தவறிழைத்த பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் பரிந்துரைத்தார்.

கஞ்சா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நாவற்குழியைச் சேர்ந்தவர் 2015ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி அதிகாலை நாவற்குழி யாழ். மன்னார் வீதியில் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் பல மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிரான வழக்கு நேற்று விளக்கத்துக்கு நியமிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விளக்கத்துக்கு அவசியமான சான்றுப்பொருள் தொடர்பான அறிக்கை மன்றினால் கோரப்பட்டது.

சான்றுப் பொருளை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பெருங்குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான உப பொலிஸ் பரிசோதகர் மன்றிடம் தெரிவித்தார்.

சந்தேகநபருக்கு எதிரான வழக்குப் பதிவு செய்யப்பட்டு 2 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. எனினும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கான சான்றுப் பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

அதனை அரச பகுப்பாய்வுக்கு அனுப்பி அறிக்கை பெற இந்த மன்று பொலிஸாருக்குக் கட்டளை வழங்கியிருந்தது.

எனினும் நீதிமன்றக் கட்டளையை உதாசீனம் செய்யும் வகையில்பொலிஸார்செயற்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு நடந்த பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை மன்று கண்டிக்கின்றது. அத்துடன் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சட்டமாஅதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு இந்த மன்று பரிந்துரைக்கின்றது.

சான்றுப்பொருளை உறுதி செய்யாது இந்த வழக்கைத் தொடர முடியாது. இந்த வழக்கிலிருந்து சந்தேகநபர் விடுவிக்கப்படுகிறார்என்றுகட்டளையிட்ட நீதிவான், வழக்கைத் தள்ளுபடி செய்தார். (ஐ)

## முட்டுக்கட்டை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலாதிக்கப் போக்குமே பிரதான காரணங்களாகும்."

– இவ்வாறு தமிழரசுக் கட்சி மீதும் அதன் தலைமை மீதும் குற்றம் சுமத்தினார் ரெலோ செயலாளர்நாயகம் என். ஸ்ரீகாந்தா.

"இலங்கைத்தமிழரசுக்கட்சியின் கீழ் மட்டத் தலைவர்கள் – குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தின் இரண்டாம் மட்டத்தலைவர்களை – கட்டுப்படுத்தி ஒரு தீர்க்கமானமுடிவுக்குவழிநடத்தமுடியாதநிலையில்கட்சித்தலைமை இருக்கின்றது போலும். கிழக்கைப் பொறுத்தவரை அங்கு தலையை ஆட்டுவிக்கிறது வால்."–என்றும்அவர்கூறினார்.

நேற்றைய கூட்டம் முட்டுக்கட்டை நிலைமையில் முடிவுற்றமைக்கான காரணம் குறித்து நேற்று முன்னிரவு அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டோம். அப்போதே ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு :–

நேற்று (செவ்வாய்) இரவு வரைநடைபெற்றபேச்சுக்களில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரைபங்காளிக்கட்சிகளான ரெலோ, புளொட்டின் கோரிக்கைகளைப் புறக்கணித்து மேலாதிக்கப் போக்கில் செயற்படஎத்தனிக்கின்றது தமிழரசு. முல்லைத்தீவிலும் அதே நிலைமை.

யாழ். மாவட்டத்தில் புளொட்டின் கோரிக்கையை ஏற்க தமிழரசுதயாராகவேஇருக்கவில்லை.

இதேவேளை மூன்று தடவைகள் பேசிவிட்டோம். குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. அந்த நிலையில்தொடர்ந்தும்பேசுவதில்பயனேதும் இருப்பதாக நாம் கருதவில்லை. தமிழரசின் போக்கு மாறாத நிலையில் இனியும் பேசுவதில் பயனில்லை.

நாங்கள் இயன்றளவு விட்டுக்கொடுப்புடன்நடந்துகொண்டோம். ஆனால் தமிழரசு அதற்குத் தயார் இல்லை.

அத்தகைய கட்சியுடன் தொடர்ந்து சேர்ந்து செயற்படுவதில்அர்த்தமில்லை.தமிழரசுடன் தொடர்ந்து பயணிப்பதா அல்லது முறித்துக்கொள்வதா என்பதைத்தான் நாம் இனிமேல்தீர்மானிக்க வேண்டியிருக்கின்றது.

அந்தத் தீர்மானத்தை எடுப்பதற்காக வவுனியாவில் எமது கட்சித் தலைமைக்குழு கூடவிருக்கின்றது. அந்தக் கூட்டத்துக்குத்தான் சென்று சென்றுகொண்டிருக்கிறோம்.அங்குஒருமுடிவை எடுப்போம். தீர்க்கமானமுடிவை எடுப்போம். அது முக்கியமான முடிவாகவும் இருக்கும்.

தமிழரசுக்கட்சியுடன்உறவை நீடிப்பதா, துண்டிப்பதா என்பதே இப்போது எம்முன்னால் உள்ள கேள்வியாகும்.

ஒரு கட்சியின் தலைமை முடிவு எடுத்தால், அதனைக் கட்சியின் அடுத்தமட்டம் ஏற்றுச் செயற்படவைக்கும்திராணியும், உறுதியும், ஆளுமையும்தலைமைத்துவத்துக்கு இருக்கவேண்டும். ஆனால் அது இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் இல்லைப் போலும்.

எந்த விடயத்தை எடுத்தாலும், அந்த முடிவை தமது மட்டங்களில்செயற்படுத்துவது கஷ்டம் என்று கூறும் தலைமை பொருத்தமற்றது.

ஒற்றுமை, ஐக்கியம், இணக்கம்என்றபெயரில்ஒருகட்சியின் மேலாதிக்கத்தை – சுயநலத்தை – நாம்தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டோ சகித்துக் கொண்டோ இருக்க முடியாது.

நாங்கள் தமிழரசுக் கட்சியுடன் இணங்கிச் செயற்படுவதற்காகப் பல விட்டுக் கொடுப்புகளைச்செய்துவந்துள்ளோம்.

தமிழ்மக்கள்பேரவைஅமைக்கப்பட்டபோது அதில் இணையுமாறு எங்களுக்கும்அழுத்தம்வந்தது. ஆனால் எவ்வளவு உறுதியாக நின்று அந்த வேளையில் நாம் செயற்பட்டோம் என்பதைத் தமிழரசுக் கட்சி புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கியத்துக்கானஎங்களின் விட்டுக் கொடுப்பைத் தமிழரசுக் கட்சி எங்களின் பலவீனமாக எண்ணி விடக்கூடாது.

"இப்போது பந்து தமிழரசுக் கட்சியின்களத்தில். அந்தக்கட்சிதான் கூட்டமைப்பின் ஐக்கியத்தைத்தக்கவைத்திருப்பதற்கு இனிப் பொறுப்புடன் – விட்டுக் கொடுப்புடன் – பரஸ்பர புரிந்துணர்வுடன் – செயற்பட வேண்டும். – என்றார். (உ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரெலோ, புளொட் மற்றும் ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட் டணி, புதிதா

பக்கம் 03

# துயிலும் இல்லத்தில் தாவரவியல் பூங்கா: பிடுங்கி எறியப்பட்டது பெயர்ப் பலகை!

கிளிநொச்சி, டிசெ. 06

மாவீரர்கள் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்ட கிளிநொச்சி- கனகபுரம் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த தாவரவியல் பூங்கா என்ற பெயர்ப்பலகை இனந் தெரியாதவர்களால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

பல சர்ச்சைகளுக்கு மத்தியில் கரைச்சி பிரதேச சபையால் நேற்றுமுன் தினம் இந்தப் பெயர்ப் பலகை போடப் பட்டிருந்த நிலையில், நேற்றுமுன் தினம் இரவே இது சேதமாக்கப்பட்டு பிடுங்கி எறியப்பட்டுள்ளது.






அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், எடுக்கப் பட்ட தீர்மானத்திற்கு அமைவாகத் தாவரவியல் பூங்கா எனும் பெயர்ப் பலகை கரைச்சி பிரதேச சபையால் நடப்பட்டது. இந்த மாவீரர் துயிலுமில்லத்தில் தாவரவியல் பூங்கா அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் 10 லட்சம் ரூபா அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே, தாவர வியல் பூங்கா எனும் பெயர்ப் பலகை பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

# உதயங்க வீரதுங்கவின் மனு மார்ச் 29 இல் ஆராயப்படும்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனரும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்கவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை அனுமதிப்பதற்காக எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதியை உயர்நீதிமன்றம் நேற்று நிர்ணயித்தது.

2005ஆம் ஆண்டு, 7 மிக் 27 ரக விமானங்களை இலங்கை விமானப்படைக்குக் கொள்வனவு செய்த போது, 1கோடியே 40 லட்சம் டொலர் நிதிமோசடி செய்தார் என்று உதயங்கவுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில், சர்வதேசப் பொலிஸார் ஊடாகக் கைது செய்யுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் கடந்த வருடம் ஒக்ரோபர் 20ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை இரத்துச் செய்யுமாறும் அதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியே உதயங்கவால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனு, உயர்நீதிமன்ற நீதியரசர்களான சிசிர டி ஆப்றூ, பிரியந்த ஜயவர்தன, நளின் பெரேரா ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டபோதே, மேற்கண்ட திகதி அறிவிக்கப்பட்டது.

அற்றோனி அதிகாரப் பத்திர உரிமையாளரும் தனது சிறிய தாயாருமான லதா இந்திராணியூடாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தான் தற்போது உக்ரைனில் வசித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள உதயங்க, நிதிக்குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட அறுவரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனுவின் 7ஆவது பிரதிவாதியான நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பரிசோதகராலேயே தன்னைக் கைது செய்வதற்கான பிடியாணை கோரப்பட்டதாகவும் அதனால் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

7ஆவது பிரதிவாதி 10 கோடி ரூபா நட்டஈடு செலுத்தவேண்டும் என, உத்தரவிடுமாறும் மனுதாரர் கோரியுள்ளார். (ஐ)

# தமிழகத்தை நோக்கி நகரும் தாழமுக்க தாழ்வு நிலை

## மேலும் வலுவடையும்

தற்பொழுது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையைக் கருத்தில் கொண்டு வங்காளவிரிகுடாவில் விசேடமாக நாட்டின் கிழக்கு பிரதேசத்தில் 1100 கிலோமீற்றர் அப்பாலுள்ள தாழமுக்க தாழ்வு நிலை எதிர்வரும் 24 மணித்தியாலங்களுள் மேலும் வலுவடையும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாழமுக்க நிலை தமிழ் நாட்டை நோக்கி நகர்வதாகவே தெரிகின்றது.

இந்த நகர்வின் அடிப்படையில் இது தமிழ்நாட்டின் கரையோர பிரதேசத்தைக் கடக்கும் என்றும் இதனால், இலங்கைக்கு எந்தவித தாக்கமும் ஏற்படாது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

இருப்பினும் இதன் இடைக்காலத் தாக்கம் நாட்டின் வடக்கு, வட மத்திய , கிழக்கு பகுதிகளில் விசேடமாக காலை வேளைகளில் மழையுடன் கூடிய காலநிலை காணப் படும். காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோ மீற்றரைக் கொண்டதாக இருக்கும்.

விசேடமாக கடல் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் குறிப்பாக வங்காள விரிகுடாவின் கடல் பகுதியில் கடல் நடவடிக்கையை தவிர்த்து கொள்வது சிறந்ததாகும். காரணம் தற்போதைய தாழமுக்க தாழ்வு நிலை காரணமாக கடல் கொந்தளிப்பு காணப்படுகின்றது.

காற்றின் வேகமும் 100 முதல் 120 வரை கொண்டதாக இருக்கும் கடல் பகுதியில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். விசேடமாக வடக்கு கிழக்கு கடல் பிரதேசத்தில் கடல் மற்றும் ஆழமான கடல் பகுதியில் கடல் நடவடிக் கையைத் தவிர்த்து கொள்ளவது சிறந்தது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

# வவுனியா – வேலன்குளத்தில் பொது நூலகம் திறந்து வைப்பு!





வவுனியா, டிசெ. 06

வவுனியா – வேலன்குளம் பகுதிக்கான பொது நூலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நியூ லைன் இளைஞர் கழகத்தின் ஒழுங்கமைப்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இந்த நிலையில், வவுனியா மாவட்டத்தில் 22 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில், புளொட் அமைப்பின் உப தலைவர்களில் ஒருவரும், வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகர பிதாவுமான க.சந்திரகுலசிங்கம், வவுனியா மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் சு.காண்டீபன், வவுனியா மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.கேசவன், நிஸ்கோ இணைப்பாளர் ரி.அமுதராஜ், இளைஞர் சேவை அதிகாரி ஸ்ரெனி மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 18 சிறுமிகள் துஷ்பிரயோகம்: கவனவீர்ப்புக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ. 06

கொஹுவளையில் அமைந்துள்ள ‘தாருள் நுஸ்ரா’ என்ற ஆதரவற்றோர் இல்லத்தில் 18 சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில், பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதிகோரி கவனவீர்ப்பு மேற்கொள்வதற்கு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, இந்த ஆதரவற்றோர் இல்லத்தில் சாரதியாகப் பணிபுரிந்த நபர், கொஹுவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கங்கொடவில நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேகநபர், இரண்டுதடவைகளும் விளக்கமறியல் வைக்கப்பட்ட பின்னர், பிணை யில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் வியாழக்கிழமை 7ஆம் திகதி, கங்கொடவில நீதிவான் நீதி மன்றத்துக்கு முன்னால் காலை 9 மணிக்கு இந்தக் கவனவீர்ப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த தினத்தன்று, இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு, நான்காவது தடவையாகவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# வடக்குக் கூட்டுறவுக்கு வழங்கிய மூன்று கோடி ரூபா பணம் எங்கே?

## சபையில் நேற்று சி.வீ.கே. கேள்வி



யாழ்ப்பாணம், டிசெ.06

“வடக்கு மாகாண ஆளுநர் நிதியத்திலிருந்து எடுத்துக் கூட்டுறவுத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட 3 கோடி 20 இலட்சம் ரூபாவுக்கு என்ன நடந்தது எனக் கூட்டுறவு அமைச்சர் வெளிப்படுத்த வேண்டும்.

இல்லையேல் 2018ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் கூட்டுறவுத் திணைக்களத்துகான ஒதுக்கீட்டை ஆதரிக்கமாட்டோம்.”

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

வடமாகாண சபையின் 111ஆவது அமர்வு நேற்றுக் கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கருத்து வெளியிடும்போதே அவைத் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண ஆளுநர் நிதியத்திலிருந்து 14 கோடி 40 இலட்சம் ரூபா நிதி எடுக்கப்பட்டது. அந்த நிதியைச் சில வகைப்பாட்டினருக்கே வழங்கவேண்டும் என மாகாண சபை நிபந்தனை விதித்திருந்ததுடன், அவர்களுக்குக் கொடுப்பதற்குச் சபை அங்கீகாரம் வழங்கவேண்டும் எனவும் கூறியிருந்தது.

இதற்கமையவே கூட்டுறவுத் திணைக்களத்துக்கும் 3கோடி 20 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட நிதி செலவிடப்பட்டுள்ளதா? செலவிடப்பட்டிருந்தால் மாகாண சபையின் அனுமதி பெறப்பட்டதா?

செலவிடப்படவில்லை என்றால் அது தொடர்பான தகவல்களை அடுத்த அமர்வில் மாகாணக் கூட்டுறவு அமைச்சர் வெளிப்படுத்த வேண்டும்.

இல்லையேல் 2018ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் கூட்டுறவுத் திணைக்களத்துக்கான ஒதுக்கீட்டை ஆதரிக்கமாட்டோம் – என்றார். (ஐ)

# மின் கட்டமைப்பு விரைவில் ‘ஸ்மாட் மீற்றர்’ முறைக்கு

## அஜித் பெரேரா தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.06

இலங்கையின் மின்சாரக் கட்டமைப்பு கூடிய விரைவில் ‘ஸ்மாட் மீற்றர்’ முறைமைக்கு மாற்றம்காணும் என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற 2018ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத்திட்ட மின்வலு புதுப்பிக்கத்தக்க சக்தி, பெற்றோலிய வளங்கள், கடற்றொழில் மற்றும் மீன்வள நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2050ஆம் ஆண்டாகும் போது பெற்றோல்,டீசல் வாகனங்கள் இல்லாதுபோகும். புதுடில்லியில் இன்று எமது நாட்டு வீரர்கள் முகமூடி அணிந்துதான் விளையாடுகின்றனர். காரணம் அங்குள்ள வாகனங்களின் நச்சுப் புகையால் அனைத்தும் தூசு மண்டலங்களாக மாறியுள்ளன. சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடியாதுள்ளது. இந்த நிலைமை எமது நாட்டிலும் ஏற்படக்கூடாது.

சர்வதேச சூரிய ஒளிக் கட்டமைப்பு உள்ளது. இந்தியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் சர்வதேச சோலர் லைன் உள்ளது. எமது நாடும் சூரிய ஒளி மற்றும் காற்றை அடிப்படையாகக் கொண்ட மின்சார முறைமைக்கு மாறினால் இயற்கையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

வருடாந்தம் மின்சார உற்பத்திக்காக டீசலுக்கு 110 பில்லியனும், நிலக்கரிக்கு 30பில்லியனும் அரசால் செலவிடப்படுகிறது. சோலர் பவர் முறைக்கு மாறினால் அதிகளவான பணத்தைச் சேமிக்க முடியும். அத்துடன், விரைவில் மின்சாரக் கட்டமைப்பு மற்றும் நிர்வாக முறைகள் நவீன முறைக்கு மாற்றப்படும். அதன் அடிப்படையில், மின்சாரக் கட்டமைப்பு அனைத்தும் ’ஸ்மாட் மீற்றர்’ முறைமைக்கு மாற்றப்படும் – என்றார். (ஐ)

# மஹிந்த தலைமையில் இன்று விசேட கூட்டம்

கொழும்பு, டிசெ.06

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்களின் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பு – விஜேராமயவில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் மற்றும் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

இதுதவிர, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மஹிந்த ராஜபக்ஷ இணைவது குறித்து பரவலாகப் பேசப்பட்டு வருகின்ற நிலையில், இது தொடர்பாகவும் இன்று கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# தென்மராட்சியில் நேற்று ஜெயலலிதாவின் நினைவு






யாழ்ப்பாணம், டிசெ.06

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் முதலாம் ஆண்டு நினைவு தினம் தென்மராட்சியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் கைதடி குமரநகர் சனசமூக நிலைய மண்டபத்திலும், சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கலந்துகொண்டு, ஜெயலலிதாவின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதோடு, நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களுக்கு இனிப்புக்களையும் வழங்கினார்.

இந்த அஞ்சலி நிகழ்வுகளின்போது மறைந்த தமிழக முதல்வரின் நினைவாக மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் தனிப்பட்ட நிதியில் இருந்து சுமார் 50 மாணவர்களுக்குப் புத்தகப் பைகளும் வழங்கப்பட்டன.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் நகர இளைஞர் கழகத்தின் தலைவருமான ஞா.கிஷோர் மற்றும் பொது அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

# இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, டிசெ.06

முல்லைத்தீவு – மாங்குளம் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நபர், நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாங்குளத்தைச்சேர்ந்த இருபிள்ளைகளின்தந்தையான காளியப்பன் புதிய குமார் (வயது-39) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதகுவைத்தகுளத்தில் வசித்து வரும் மேற்படி குடும்பஸ்தர், குளிக்கச் சென்ற சமயம் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# ஐ.நா. அதிகாரிகள் குழு நேற்று அமைச்சர் ராஜிதவுடன் பேச்சு



கொழும்பு வந்துள்ள ஐ.நா. பணிக் குழுவுக்கும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுச் சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் சிறைச்சாலைச் சுகாதார சேவைகள் மற்றும் மனநோய் தொடர்பிலான சுகாதார சேவைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மனநோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கும் முறை தொடர்பிலும், சிறைக் கைதிகளுக்குச் சிகிச்சை வழங்குதல் மற்றும் புனர்வாழ்வு அளிப்பது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஐ.நா. அதிகாரிகளுக்கு இது தொடர்பில் விளக்கம் அளித்தனர்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் மகிழ்ச்சி அளிப்பதாகவும், அது தொடர்பிலான அறிக்கை ஒன்று தயாரிக்கப்படவிருப்பதாகவும் ஐ.நா.பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாச, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

# மஹிந்த அணியினர் நேற்று திருமலையில் கட்டுப்பணம்



திருமலை, டிசெ.06

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மஹிந்த அணியினர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன திருகோணமலை மாவட்டத்தில் கட்டும் பணம் செலுத்தியுள்ளது.

திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் மற்றும் கட்சியின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் இணைந்து நேற்றுக் கட்டுப் பணத்தைச் செலுத்தினர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.